# தொண்டன்

மார்கழி ★ 1986

கிறிஸ்மஸ் சிறப்பிதழ்



V.P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ உங்கள் அன்றாட பாவனைக்குத் தேவையான

தரமான, மலிவான தயாரிப்புக்கள்

- மட்பாண்டங்கள்
- பூச்சாடிகள்
- சீமேந்து பூக்கற்கள்
- கயிறு தும்புத்தடி வகைகள்
- பன்பாய்கள்
- படங்களுக்கான பிறேம்ஸ்
- கடதாசிப் பூக்கள்
- காகித உறைகள்
- பப்படம்
- பற்பொடி
- கைத்தறி புடவைகள்
- ''றெடிமேட்'' ஆடைகள்
- ஜாம்
- இனிப்பு வகைகள்
- பழரசபானங்கள்
- மாசி
- கேக் [பல்வகையான]
- இறால் கருவாடு
- மரக்கறி வகைகள்
- ஓமோவாட்டர்

இன்னும் பல்வகைப் பொருட்களும், சுகாதார முறைப்படி தரமாகத் தயாரித்து, பிளாஸ்ரிக் உறைகளில் அடைக்கப்பட்டு நியாயமான விலையில் விற்கப்படுகின்றன.

தொடர்பு:—

# "எகெட்"

52, மத்திய வீதி,
மட்டக்களப்பு.

☎ 065 - 2723.

# தொண்டன்


மார்கழி — 1986

மலர்: 18 இதழ்: 11

★

ஆசிரியர் :
சி. பி. இராஜேந்திரம்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :
பீ. ஜோசப்
ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்

தொடர்பு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
ஆயரகம்,
மட்டக்களப்பு.
SOCIAL COMMUNICATIONS CENTRE
BISHOP's HOUSE,
BATTICALOA.

விலை :
தனிப்பிரதி ரூபா 3/25
ஆண்டுச் சந்தா ரூபா 35/-


## உள்ளே...


1. குருத்துவ வாழ்வில் ... 2
2. கிறிஸ்மஸ் ஓர் ... 4
3. சிரித்தனன் யேசு பாலன் ... 6
4. ஒளி பிறந்த போது ... 7
5. இளைஞர் அரங்கம் ... 10
6. முழுமையற்ற தலைமுறை ... 13
7. கலைஞர் சந்திப்பு ... 15
8. விடுதலை வேண்டி நின்ற ... 19
9. பண்டிகைக்காலப் பரிசுகள் 21
10. திருமறையைத் தெரிந்து ... 23
11. வானொலி சிறப்பு ... 25
12. சொந்தம் எப்போதும் ... 26
13. கடல்கடந்த நாடுகளில் ... 29
14. குறுக்கெழுத்துப் போட்டி ... 33
15. உங்கள் பக்கம் ... 35
16. இதயத்திலிருந்து ... 36


வாசக நேயர்கள், வாடிக்கையாளர்கள், எழுத்தாளர்கள், விற்பனையாளர்கள், உதவியாளர்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.


— நிர்வாகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்துவ வெள்ளி விழாக் காணும்

# எங்கள் ஆயர்



இத்திங்கள் இருபதாம் நாள் (20-12-86) திருகோணமலை - மட்டக் களப்பு மறைமாவட்ட ஆயர் **பேரருள்திரு. ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை** அவர்களின் குருத்துவ வெள்ளிவிழா நாளாகும்.

ஆயரவர்கள் 1961 ஆம் ஆண்டு மார்கழித்திங்கள் 20 ஆம் நாள் உரோம் நகரில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். தமது குருத்துவ வாழ்வில் பலதரப்பட்ட பணிகளைத் திறம்பட ஆற்றியுள்ள ஆயரவர்கள், யாழ். மறைமாவட்ட சமயத்துறை நடுவராகவும், யாழ். ஆயரின் செயலராகவும், விசுவாசப் பரப்புதல் சபையின் தேசிய இயக்குனராகவும், கத்தோலிக்க பாடசாலைகளின் பொது முகாமையாளராகவும், திருத்தந்தையின் மறைபரப்புச் சபையின் ஆசியப் பிராந்திய பிரதிநிதியாகவும், 'புதிய உலகம்' சஞ்சிகையின் வெளியீட்டாளராகவும் பணியாற்றியகாலங்கள் குறிப்பிடத்தக்கனவாகும்.

இத்தகைய சிறந்த பணியாளனை, ஆர்வமும், ஆற்றலும்மிக்க இறை அடியானை, இறைவன் தம் திருச்சபையை வளர்க்கும் பணியில் மேலும் ஒருபடி உயர்த்தி ஆயராகத் தெரிந்துகொண்டார்.

ஆயர் ஜோசப் கிங்ஸ்லி அவர்களால் திரு./மட். மறைமாவட்டம் பொலிவும், ஏற்றமும் பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருத்துவ வாழ்வில் வெள்ளி விழாக் காணும் ஆயரவர்களை மறை மாவட்ட மக்கள் நெஞ்சார வாழ்த்துகிறார்கள்.

மறைமாவட்டத்தின் தனிப்பெரும் ஏடான தொண்டனும் ஆயரின் பணிகள் சிறக்க, அது பொன் விழாவையும் கடந்து வளர இறையாசீர் வேண்டி, இதயம் கனிந்து வாழ்த்துகிறான்.

## வாழ்த்துக்கவி

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

குருத்துவ வாழ்வி லாண்டு
இருபத்தி யைந்து கண்டாய்
கருத்துடன் வாழ்ந்து கடவுள்
பணியினில் நிறைவு கண்டாய்
பொருத்தமா யாய ராகப்
புகழுடன் தொண்டு செய்பே
ரருட்திரு யோசப் கிங்ஸ்லி
ஆயரே வாழி! வாழி!

வண்டமிழ்ப் பற்றும் வாய்த்த
வளர்கலை யார்வம் சொல்லில்
விண்டிட வொண்ணா வாற்றல்
அன்பொடு பழகும் நெஞ்சம்
கண்டவர் கருத்தை யெல்லாம்
கவன்றிடு(ம்) நேயம், உன்போல்
உண்டோ ராயர்? உன்னைப்
பெற்றோம், பேறுகள் பெற்றோம்!

எண்ணருந் துயர மேகம்
எங்கணுங் கவிந்த போதும்
கண்ணிமை துஞ்சி டாமல்
கடுகியே கைகொ டுப்பாய்
புண்ணிய மைந்தா! பூக்கும்
புன்னகை பொலியும் போதா!
திண்ணிய அறிவும் அருளும்
தந்துனை யிறைவன் காக்க!

எம்.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மஸ் ஓர்.........

✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱✱

அருள்செல்வி செல்வராணி அ.கா.



## கிறிஸ்மஸ் ஓர் இரகசியம்

"கடவுள் தன்மையில் விளங்கவேண்டிய அவர் கடவுளுக்கு இணையாய் இருக்கும் நிலையை விடாமல் பிடித்துக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் தன்மை பூண்டு மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி தம்மைத் தாழ்த்தினார்". (பிலிப். 2:6)

அன்றும் என்றும் வாழும் இறைவன், காலம் கடந்த கடவுள் கண்ணுக்குத் தென்படாத பரம்பொருள் மனிதனாகத் தோன்றினார். என்றும் பிதாவின் நினைவிலே நின்ற இறைமகனார் தன் கடவுள் தன்மையைத் துறந்து மனிதனாகப் பிறந்தார். இது எப்படி என்பது எம்மால் விளங்கிக்கொள்ள முடியாதது ஆனால் இந்த மானிட அவதாரத்தின் எதிரொலி மனிதரின் மீட்பு இந்த மீட்பின் பாதையிலே பவனி வரும் மனிதனின் வரலாற்றிலேயும் எண்ணற்ற தொடர்ச்சியான இரகசியங்கள் புதைந்து கிடக்கின்றன. அவனால் அவற்றை விளக்கவும் விழுங்கவும் முடியாமல் உள்ளது. இதற்கு ஒரே வழி கிறீஸ்துவைப் போல் மனிதனும் இறைவனால் தனக்கு அளிக்கப்பட்ட சக்திகளில் இருந்து தன்னை வெறுமையாக்கி இறைவழி வாழ்வதாகும்

## கிறிஸ்மஸ் ஓர் அன்பு

"அந்த ஒரே பேறான மகனையே அளிக்கும் அளவிற்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்." (அருள. 3:16)

இறைவனை பூவுலகு கொணர்ந்த சக்தி அன்பு. அன்பின் விழாவே கிறிஸ்மஸ். அன்பு எதையும் சாதிக்கக்கூடிய சக்தி வாய்ந்தது. அன்பிற்கு அணைபோட முடியாது. அது எப்பொழுதும் செயல்வடிவிலே முழுமையடைகின்றது.

இறைவன் அன்பைக் கொடுத்தார்
இறைவன் அன்பில் வாழ்ந்தார்
இறைவன் அன்பை நினைத்தார்
இறைவன் அன்பைப் பேசினார்
இறைவன் அன்பினால் உயிர் கொடுத்தார்

நாம் இவைகளை எம்வாழ்வில் கடைப்பிடித்தால்

கண்ணீரின்றித் துயில்வோம்
துன்பப்படுவோரை அண்டுவோம்
மனக்காயங்களை ஆற்றுவோம்
மனப்புயல்களை தணிப்போம்
வாழ்வில் உயிருள்ளவராவோம்

எனவே கிறீஸ்மஸ் எமக்கு கண்களினால் கண்டு உள்ளத்தினால் வாழும் ஓர் அன்பு வாழ்வாகும்.

## கிறிஸ்மஸ் ஒரு மகிழ்ச்சி

"அஞ்சாதீர் இதோ! மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் இன்று தாவீதின் ஊரிலே உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார்." (லூக் 2:10-11)

கிறீஸ்மஸ் அன்று வானவர் மகிழ்ச்சியின் செய்தியை சாதாரண ஏழை மக்களுக்கு எடுத்துக் கூறினர், அவர்கள் கூறியது ஒரு மகிழ்ச்சியின் நற்செய்தி. இன்று நாட்டில் அடிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாக அடக்கப்பட்டு இருளில் வாழ்வோர்க்கு இந்த மகிழ்ச்சியின் நற்செய்தி எடுத்துச் செல்லப்படவேண்டும். இன்றைய உலகு மகிழ்ச்சியை எடுத்துச் செல்பவர்களையும், மகிழ்ச்சி கொண்டவர்களையும், மகிழ்ச்சியைத் தாங்குபவர்களையும் எதிர் நோக்கியுள்ளது போர்களையும், பொறாமை பூசல்களையும் கொண்டிருக்கும் உலகிற்கு கிறீஸ்மஸ் கொடுக்கும் மகிழ்ச்சியின் செய்தி எடுத்தியம்பப்படவேண்டும்.

''எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும
சிறைப்பட்டோர் விடுதலையடையவும்
குருடர் பார்வை பெறுவர் என
அறிவிக்கவும்
ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு
வழங்கவும
ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை
அறிவிக்கவும்

அவர் என்னை அனுப்பினர் (லூக்.4:18,19) என்னும் மகிழ்ச்சியின் நற்செய்தி எடுத்துக் கூறப்படவேண்டும்.

## கிறிஸ்மஸ் ஒரு பகிர்தல்

அன்று பெத்தலேகம் நகரிலே ஊரே உறக்கத்தில் ஆழ்ந்திருந்த காலத்திலே இறைவன் தம் அன்பை தன் ஒரே குமாரன் வழி எம்முடன் பகிர்ந்து கொண்டார். இறைவனே முதலில் இந்தப் பகிர்தல் என்ன என்பதைக் காட்டியுள்ளார் உண்மையான அன்பு பகிர்தலையே வேண்டி நிற்கும் கிறீஸ்மஸ் என்பதும், வெறும் வார்த்தையான பகிர்தலாக அல்லாது செயலாக மாறவேண்டும். எம்மிடமுள்ளதை இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழவேண்டும். இதையே யேசு கூறினர்.

'' கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்ருய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். எந்த அளவையால் அளப்பீர்களோ அதே அளவையால் உங்களுக்கு அளக்கப்படும் '' (லூக். 6:38)

## கிறிஸ்மஸ் ஒரு புகழ்ச்சியும் அமைதியும்

''வானோர் படைத்திரள் தூதரோடு சேர்ந்து உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக. உலகிலே அவர் தயவு பெற்றவர்க்கு அமைதி ஆகுக. (லூக். 2:14)

அன்று வானவர் குழாம் இறைவனை வாழ்த்தியதோடுமட்டும் நின்றுவிடாமல் உலகில் அவரை ஏற்றுக்கொண்டவர்களுக்கும் சமாதானத்தையும் அமைதியையும் எடுத்துரைத்தனர். புகழப்பட வேண்டுமென்பதற்காக புகழ்வது புகழ்ச்சியல்ல மாருக புகழ்ச்சியும், அமைதியும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வரவேண்டும். எமது துன்பத்திலும் இன்பத்திலும் இறைவன் எமக்களித்த இந்த அமைதி எம் உள்ளத்தில் இளையோடவேண்டும். இது எம்மோடு மட்டும் நின்றுவிடாது எம் அயலவரிலும் தொடரவேண்டும். எம் அயலவரிலே இறைவன் ஆற்றும் நற்செயல்களைக் கண்டு பொறாமை கொள்ளாது இறைவனுக்கு புகழ்ச்சியும் நன்றியும் கூறுவதே கிறீஸ்மஸ் ஆகும்.

## கிறிஸ்மஸ் ஒரு கொடுத்தல்

''தம் பேழைகளைத் திறந்து பொன்னும் தூபமும் வெள்ளைப் போளமும் அவருக்கு காணிக்கையாகச் செலுத்தினர்.''
(மத். 2:11)

''நீண்டநாட் பயணம் செய்த மூவரசர் இறைவனை மனிதனுகக் கண்டதும் தம்மிடம் இருந்தவற்றில் விலைமதிப்புப் பொருந்தியதை அவருக்கு காணிக்கையாக்கினர் '' கிறீஸ்மஸ் தனக்கென எதையும் வைத்திருக்காது பிறருக்கு காணிக்கையாக்குவதாகும். மிதமிஞ்சிய ஒன்றை அல்லது பிரயோசனமற்றதொன்றைக் கொடுப்பதல்ல கொடுத்தல். கிறீஸ்துவும் தன்னையே தம் உயிரையே மற்றவருக்காகக் கொடுத்தார். நாமும் எமது அன்பை, எம்மை, எம் வாழ்வை, மகிழ்ச்சியை, நேரத்தை மற்றவரின் மகிழ்ச்சியிலும் துன்பத்திலும் கொடுத்தலே உண்மைக் கொடுத்தலாகும். கொடுப்பவர் என்றும் தனக்காக அல்ல பிறருக்காகவே வாழ்கின்ருர். இதுவே உண்மையான கிறிஸ்மஸ் ஆகும்.

| கி<br>றி<br>ஸ்<br>ம<br>ஸ் | அன்று நடைபெற்றது.<br>இன்று நடைபெறுவது.<br>இனிமேலும் நடைபெறப்போவது.<br>உள்ளங்களில் நித்தமும் பிறப்பது.<br>கூறப்பட்டு திரும்பவும் கூறப்படுவது.<br>இதை அடைய ஒரே வழி.<br>அதை ஆசித்து வாழ்வை மாற்றுதலே. |
|---|---|



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிரித்தனன் இயேசு பாலன்

இருளான உலகுக்கு ஒளிதந்து இரட்சிக்க!
இறையோனாய் வந்த சீலா!
கருவானாய்! கன்னிகை மரியாளின் வயிற்றிலே!
கருணைசேர் இயேசு பாலா!
உருமாற்றி உலகினை! உயர்வாய்ப் பண்ணிட
உதித்தனை தேவ தேவா!
அருளெனும் மழையினால்: மண்ணகத் துயரனல்
அழித்திடும் சுடரே வாவா!

வாழவே வைத்திந்த வையகம் மீட்டிடும்!
வான்மதி ஏழையாய் நீ!
சூழவே! கால்நடை சுருண்டிடும் வைக்கலில்!
''சுந்தரா'' உதித்த ''தேன்'' நீ!
நாளெல்லாம் வறுமையில் நலமின்றி வாடிடும்!
நலிந்தவர் தம்மை நீயும்
ஆளவும்! அன்பெனும் அரசினால் பேணவும்
ஆயனே! ஏழையானாய்!

மேய்ப்ப ''நீ'' பெத்தில கேமெனும் நகரிலே!
மிளிர்ந்ததோர் புதிய தீபம்!
தோய்ந்து நீ பூவினை தூயருல் மறையினால்!
துடைத்தனை கரிய பாவம்!
காய்த்ததோர் கனிமரம் அன்புசெய் அட்சயம்
கரையிலா கருணை வெள்ளம்
தாய்த்தனம் கொண்டுமே! தரணியைக் காத்ததோர்
தரமுயர் தெய்வ உள்ளம்.

மார்கழிக் குளிரிலே! மலர்ந்ததோர் புதுமலர்
மரணத்தை வென்ற தேவன்!
ஆர்த்(து) ''உனைப்போலவே! அயலவன் தன்னையும்
அன்பு செய்'' என்ற நேயன்
பார் எலாம் கங்குலாய் படிந்துள்ள மடமையைப்
பறித்ததோர் தூயவெய்யோன்!
சீர்மிகக் கொண்டுமே! சிறந்திட வையகம்!
சிரித்தனன் இயேசு பாலன்.

**நிலாதமிழின்தாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# ஒளி பிறந்த போது!

ஆம், அன்று மார்கழி மாதம் இருபத்தைந்தாம் திகதி நல்லிரவு பன்னிரண்டு மணிக்கெல்லாம் எல்லாத் தேவாலயங்களின் மணிகளும் தமது ஏகோபித்த ஓசையின் மூலம் மானிட மீட்பர் பிறந்த தினத்தை, நேரத்தை. பறைசாற்றின. இவ்வோசை பன்னீர்ச்செல்வத்தின் செவிப்பறையிலும் முட்டி மோதத் தவறவில்லை...... ஆனால்......

கையில் இருந்த பைபிளை திறந்து வெளியேயிருந்து வீசிய நில ஒளியில் அங்கு அவனது கண்ணுக்குத் தென்பட்ட அந்த வசனங்கள் 'இதோ! மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று தாவீதின் ஊரிலே உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார். அவரே ஆண்டவராகிய மெசியா'

(புனித லூக்கா 2:10–11)

அவன் எதிரே நீண்டு கிடந்த இரும்புக் கம்பிகள் பூதகரமாக அவனை நோக்கி ஏளனக்குரல் எழுப்பின. "உனக்கும் சமூகத்துக்குமுள்ள தொடர்பை நாம் அறுத்துவிட்டோம். நீ எப்படியப்பா வெளியே போவாய்" அவன் எண்ணங்கள் அவன் மனதிலேயே தோன்றி அவ்வறையையே அனுதரவாக சுற்றி அழுதன. ஆம், மானிட மீட்பர் பிறந்துவிட்டார். எமக்கு மீட்பு.........? அவன் மனம் குமுறியது.........

அவனுக்கு அவ்வசனங்கள் நம்பிக்கையை ஊட்டின. அடுத்த கிறிஸ்மஸ் பண்டிகையின் போதாவது முரண்பாடுகள் நீங்கி முழுவெற்றி கிடைக்காதா...?...?...?... உண்மைத் திரை! நீதி நடுத்தெருவில்! அமைதி! அதைக்காணவில்லை. மனிதாபிமானம் மடிகின்றது.

சென்ற வருடம் இதே தினம் அவன் புத்தாடைகள் அணிந்துகொண்டு சாதாரண ஒரு மனிதனாக ஆலயத்தில் ஆசாரமிட்டான்......... இன்று அவன் இருட்டறையில் எந்தவித தொடர்புமின்றி தள்ளப்பட்டுள்ளான். அவனது ஆடை சவற்காரத்தைக்கண்டு பதின்மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. அவனது முகத்தில் சவரக் கத்திபட்டு பதினான்கு மாதங்கள் இருக்கும். சரியான உணவோ, உறக்கமோ அவனுக்கு அவ்விடத்தில் ஏது? அவன் மனம் மட்டும் சுதந்திர தாகத்தில் தவித்தது. மெசியா கொண்டுவந்த மீட்டு எமக்கு எப்போது? அவன் மனம் உரக்கக் கூவியது.

இவ்வளவிற்கும் அவன் விட்ட பிழைதான் என்ன? களவெடுத்தானா? இல்லையே, அப்படியானால் கற்பழித்தானா? இல்லையே, அப்படியானால் யாரையும் கொலை செய்தானா? இல்லையே, அப்படியானால் அவன் இழைத்த தவறுதான் என்ன? உண்மையை எடுத்து எழுதியதுதான் அவன் விட்ட பிழை. உரிமைக்குரல் எழுப்பினமைக்காக அவனுக்குக் கிடைத்த பரிசு இதுதான். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தான் என்று இருந்தால் போதாதோ.

அடிக்கடி அவனுக்குக் கிடைத்த சித்திரவதைகள் இவைஎல்லாம் அவன் உருவையே சீர்குலையவைத்து ஒவ்வொரு அங்கங்களும் தமது வேதனைகளை அவனது மனதுக்கு அறிவித்த வண்ணமாக இருந்தது. அவன் அணுஅணுவாக துடித்தான்.

பொழுது புலர்ந்தது. அன்று வழமைபோல அவனது பொழுது கழிந்தது. மறுநாள் விட்டார் ஒவ்வொருவரையும் எண்ணிப் பார்க்கிறான் அம்மா என்னை எண்ணி எண்ணி அழுதபடியே இருப்பாள். அப்பா...... இவனுக்கேன் தேவையில்லாத வேலை எல்லாம்... என்று அடிக்கடி ஏசிய வண்ணம் இருப்பார் தங்கை திருமதி, கோதை என்னை எண்ணி எண்ணி ஏங்குவார்கள்... நான் அன்பாய் வளர்த்த கண்ணன் நாய் என்னைக் காணாது அடிக்கடி ஊளை இட்ட வண்ணமல்லவா இருக்கும்... இவ்வளவுக்கும் எனது புஸ்பா... ஆம் எனது அன்புக் காதலி எப்போதுமே என் நினைவாக அல்லவா இருப்பாள்... எனக்காக பாவம் அவளும் ஏங்கி மடிவதா? எல்லாச் சுமைகளும் நெஞ்சில்வந்து பொறுக்க தொண்டை சரியாக வலி எடுத்தது. ஓவென கதறி அழ வேண்டும் போன்ற துடிப்பும் ஒருபுறம்.

'402 உனக்கோர் கடிதம்' என ஜெயிலர் கடிதம் ஒன்றை வீசிவிட்டுப் போகும்போது தான் சுயநினைப்பு வந்தது உரத்துப் படித்தால் தனிமையின் செறிவு குறையும்போல் இருந்தது. உடனே உரத்துப் படிக்கத் தொடங்கினான்.

புஸ்பா வரைவது.........
உங்களைப் போன்ற மாபெரும் இலக்கியக் கர்த்தாக்களுடன் என் போன்ற சாதாரண சமானிய பெண்ணாகிய நான் வெறும் எழுத்துக்களைப் பற்றி பேசிக்கொள்ளலாமே அன்றி மிகப் பெருமை நிறைந்த ஆழமான, ஆத்மார்த்த அன்பினைப் பற்றி பேசமுடியுமா என்ன?

நீங்கள் அங்கு அடையும் சித்திரவதைகளை எனது மனக் கண்ணுள் கற்பனை செய்து பார்க்கிறேன்......... உங்களைப் பிரிந்து நானடையும் துயரை அந்த உணர்வுகளை எந்தச் சொல்லாலும், எவராலும் எடுத்துக்காட்டிவிடமுடியாது. உங்களை இதயத்தில் வைத்துக் கொண்டே, உங்களை எண்ணி எண்ணி ஏங்குகிறேன்.

பன்னீர்,
உங்கள் மடலை ஒவ்வொரு வாரமும் பார்க்கா விட்டால் அந்த தாக்கம் மிகப் பெரிது. அதை இம்மாதம் முழுவதும் அனுபவித்துக் கொண்டு வருகின்றேன் உங்கள் எண்ணத்திலேயே வினாடிக்கு வினாடி உடல் மெலிந்து, காற்றில் கலந்துகொண்டு போய்விடும் போலிருக்கிறது. அப்படிப் பறந்தாலும் பரவாயில்லையே என்னை உங்களிடம் அல்லவா காற்றும் சேர்த்துவிடும் தனிமையுங்களைவாட்டுகிறதா?

## செல்வி. எஸ். பி. வைலற் சரோஜா B. Com.

'தமிழகம்'
திருகோணமலை.
21-12-1984.

என்றும் இனிய பன்னீருக்கு,
கண்ணீருடன்,

எனது அகம்பாவம் யாரையும் நான் நாடியதோ மண்டியிட்டதோ மடல் வரைந்ததோ கிடையாது. என்றால் எழுத முடிந்தது உங்களுக்கு மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே உங்கள் அன்புறவில் என்னை அழித்துக் கொள்ள வேண்டும் என்ற அவாவாகும் எமது அன்பைப் பிரிக்கும் சக்திகளுக்கு நீங்கள் எப்போதாவது அடிமையானால் அதன் பின்பு என்னை... நீங்கள் உயிரோடு காணமுடியாது. தற்கொலை செய்யும் கோழைத்தனம் என்னிடம் வளர்ந்து வருகின்றது என்று நீங்கள் கருதினால் கூட அதைப்பற்றி கவலைப்படத் தயாரில்லை என்னை மறவாது எனக்கு மடல் வரைய வேண்டுகிறேன்.

இவ்வண்ணம்,
உங்கள் அன்பு
புஸ்பா

கடிதத்தைப் படித்து முடித்ததும் ஓர் வரட்டுப் புன்னகை ஒன்று அவன் உதடுகளில் நெளிந்தது. ஒருபக்கம் புஸ்பாவின் மடல் கண்டு மகிழ்ச்சிதான் இருந்தும், "எண்ணித் துணிந்தபின்பு எண்ணுவதென்பது இழுக்கு" அவன் வாய் முணுமுணுத்தது அவன் பதில் வரைய ஆயத்தமானான்.

சிறைச்சாலை,
யாழ்ப்பாணம்.
28-12-84.

அன்பின் புஸ்பா!

உன் மடல் கண்டேன் அம்மா... இங்கு ஒரு வாரத்துக்கு ஒரு மடல்தான் போட முடியும் அம்மாவுக்கு, சகோதரர்களுக்கு, நண்பர்களுக்கு மடல்கள் வரைய வேண்டும் என கை துறுதுறுத்தாலும், சட்டம் இதற்கு இடம் தர மாட்டாது. கடிதம் உடன் உனக்குப் போட முடியவில்லை அதற்காக மன்னித்துக்கொள். தனிமை வாட்டுகிறதா? என்று கேட்டிருந்தாய். தனிமை வாட்டவில்லை, வதைக்கிறது புஸ்பா... அமைதிப் பூதம் ஒரு புறம் எனது இதயத்தை ஏறி மிதிக்கிறது தனிமைப் பேய் தனது கொடிய கரத்தால் எனது தொண்டையை நெரிக்கு வருவது போல் உள்ளது

நேரு சிறையில் இருந்த போது 'ஒரு பெண்ணின் குரலையோ, ஒரு நாயின் குரைப்பு சத்தத்தையோ கேட்க எவ்வளவு காலம் ஆகின்றன' என்று சொல்லி வேதனைப் படுகிறார். அதன் கருத்தை நான் இப்போது உணருகிறேன். வந்த புதிதில் தனிமை என்னை வாட்டியது இப்போது பழக்கப் பட்டுவிட்டேன் புஸ்பா......... அண்ணாவைப்போல் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் எல்லாம் இடம் பிடித்து அவர்களின் வெள்ளையுள்ளங்களில் இருந்து பொங்கிப் பொசியும் அன்பு வெள்ளத்தில் நீந்தித் திளைக்க வேண்டும் போல என் மனம் துடிக்கிறது நேரு. காந்தி, லிங்கன், அண்ணா மாட்டின் லூதர் கிங் போன்ற பெரியவர்களின் நூல்களை வாசிக்க, வாசிக்க எனக்கு நானே ஏற்படுத்திய குறுகிய தளைகள் அறுபட்டு தமிழ் குலமே எனது குடும்பமாகத் தெரிகிறது.எனது தாய் தமிழ் தாய்தான், எனக்கு எந்தவிதமான சொந்த பந்தங்களோ கிடையாது. ஏன் என் காதலி கூடத்தான்.

என்ன? திடுக்கிட்டு அழுகிறாயா புஸ்பா? அழாதே நாளுக்கு நாள் இறந்துகொண்டிருக்கும் என்போன்ற இளைஞருக்காக அழு புஸ்பா. ஏதோ அப்போது இருந்த இளமைத் துடிப்பில் உன்னைக் காதலித்தது உண்மைதான் அதற்காக நான் உன்னை வெறுக்கவுமில்லை ஒதுக்கவுமில்லை, விதி வெல்லு மாயின் மீண்டும் சுதந்திரமாக உன்னிடம் வருவேன் ஓர் அரசியல் வாதியின் ஓலைக்குடிசையும் விடுதலைப் போராட்டமும் இன்பம் தரா. இலட்சிய வாதிகளின் மனைவிகள் ஒருபோதும் இன்பமாக வாழ்ந்தது கிடையாது அப்படியிருக்க என்னை எண்ணி உனது இளமையைப் பாழாக்காது நல்ல திருமணம் செய்து நல்ல வாழ்வை வாழ முற்படு புஸ்பா. கண்ட கண்ட சினிமாப் படங்களைப் பார்க்காதே புஸ்பா படம் வேறு வாழ்க்கை வேறு உணர்ச்சிகளை வீணுக்காது நடப்பதுதான் நல்லதென நினைக்கிறேன். எமது காதல் மலர் தமிழுக்கு உரமாகட்டும் புஸ்பா........ கண்ணீரைத் துடைத்துக்கொண்டு புதிய பாதையில் செல்லத் தயாராகு...... இது எனது அன்புக் கட்டளை புஸ்பா......

இங்ஙனம்,
பன்னீர்ச்செல்வம்

கண்ணீரை சுண்டி எறிந்த பன்னீர் காந்திஜியின் சத்திய சோதனையை தொடர்ந்து படிக்க ஆரம்பித்தான்.

— ( யாவும் கற்பனை ) —

★★★★★★★★★★★

'போ' என்று சொல்லாதவன் ஒருவன்தான். அவன் தான். இறைவன். இல்லாதவன் தானே உன்னைப் பார்த்துப் போ என்பான்.


★★★★★★★★★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் அரங்கம்

# வழிகாட்டும் ஒளி



★ இருளைப் போக்க

★ வழியைக் காட்ட

மக்கள் பயன்படுத்தும் ஒளிச்சாதனங்களை விட இன்று,

★ எமக்கு — எம் பங்கிற்கு

★ எம் கிராமத்திற்கு — நகரத்திற்கு

★ எம் நாட்டிற்கு — இந்த உலகத்திற்கு சிறந்த ஒளிமயமான உள்ளங்கள் அவசியம்.

ஊரிலும் — நாட்டிலும் ஒளியை ஏற்ற - முன் வந்தவர்கள் — அமர்த்தப்பட்டவர்கள் பலர். ஆனால் அவர்களின் செயற்பாடுகளும் — விளைவுகளும் பூச்சியம் தான்.

அன்று — கிறிஸ்து ஒளியாக — வழியாக உலகிற்கு வந்தார். அந்த வருகையில் உண்மை ஒளியை மக்கள் கண்டனர் — அனுபவித்தனர். அதே ஒளியையும் — வழியையும்தான் தமது சூழலிலிருந்து மக்கள் இன்றும் அனுபவிக்கத் துடிக்கின்றார்கள். ஆனால்

★ அந்த உயிருள்ள ஒளி பிறந்ததை நினைப்பதுடன் நில்லாமல்

★ அந்த நாளை புத்தாடை அணிந்து மட்டும் கொண்டாடி விட்டு மறவாமல்

★ அந்த நாளில் தேவையற்ற உரைகளையும் — விழாக்களையும் செய்துவிட்டு செல்லாமல்

மக்கள் எதிர்பார்க்கும்,

★ உண்மை வாழ்வை

★ அன்பு வாழ்வை

★ சமாதான வாழ்வை

★ இறையுள்ள வாழ்வை

எம்மால் ஏற்படுத்த முடியுமா? என இன்றையத் தலைவர்களும் — நாயகர்களும் சிந்திக்க வேண்டும். அதற்கான வழியிலேயே உருவாக்கவேண்டும் — உருவாக்கப்படவேண்டும் — அல்லது சுயமாக உருவாக வேண்டும் என அன்புக்குரல் கொடுப்பது —

**கலையுலகன்**

> ''இருளைப் பழிப்பதை விட ஒளியை ஏற்றுவதே மேல்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தினமும் நத்தார்

## இ. பெஸ்லியோ வாஸ்

அந்த கலாசாலை மண்டபத்தில் அக்கலாசாலையின் முதலாம் வருட மாணவர்கள் கூடியிருந்தார்கள். மேசையில் முதலாம் வருட மாணவ தலைவியும். தலைவரும் கலாசாலை அதிபருமான குருவானவரும் அமர்ந்திருந்தார்கள். அன்று அக்டோபர் மாதத்தின் ஒரு புதன் கிழமை ஆகும்.

மாணவர் தலைவர் எழுந்துநின்று பேசினார். 'அன்பானவர்களே வணக்கம். இன்னும் சில வாரங்களில் இரண்டாம் வருட மாணவர்கள் இக்கலாசாலையைவிட்டு சென்றுவிடுவார்கள், இக்கலாசாலையின் பாரம்பரியப்படி அவர்களை மதியபோசன விருந்துபசாரத்துடன் நாம் அனுப்பிவைக்க வேண்டும். இது சம்பந்தமாக உங்கள் அபிப்பிராயங்களை கூறும்படி வேண்டிக்கொள்கின்றேன்.

சலனமற்று இருந்த அச்கூட்டத்தில் ஒரு மாணவன் எழுந்துநின்றுபேசத்தொடங்கினன். தலைவர்களே, அதிபர் அவர்களே, அன்புள்ளங்களே அனைவருக்கும் வணக்கம். எமது இரண்டாம் வருட மாணவர் எமக்கு அளித்த ராகிங் சேட்டைகளை நாம் மறக்கமுடியாது. அத்துடன் 'மெஸ்' விடயங்களில் என்னமாதிரி நாம் நடத்தப்பட்டோம் என்பதையும், மற்றும் இவ்விடத்தில் நாம் சொல்லமுடியாத சில விடயங்களில் எவ்வாறு அவமதிக்கப்பட்டோம் என்பதனையும், நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

எனவே அவர்களுக்கு பிரிவு உபசார வைபவம் எதனையும் நாம் நடத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கின்றேன்' மண்டபம் கரகோசத்தால் அதிர்ந்தது.

மண்டபம் அமைதியானதும் இன்னொரு மாணவர் எழுந்தார். 'அனைவருக்கும் அன்பு வணக்கங்கள். நாம் அனைவரும் படித்தவர்கள். சிலர் தவறு செய்தார்கள் என்பது உண்மை. அவர்கள் செய்த அதே தவறை நாமும் செய்ய வேண்டுமா? 'இன்னா செய்தாரை ஒறுத்தல்...' என்ற வாக்கு எமக்கு தெரியாதா? அவர்கள் செய்தவற்றை மறப்போம்; மன்னிப்போம். மற்றவர்களுக்கு நாம் முன் மாதிரிகையாக இருந்து அவர்களை சிறப்பான முறையில் வழியனுப்பி வைப்போம். அன்பு செய்தவர்களை அன்பு செய்வதால் என்ன பயன்...? வணக்கம்'' மீண்டும் மண்டபத்தில் கைதட்டல்.

பலர் விருந்துபசாரம் வேண்டும் என்றும், வேண்டாம் என்றும் பேசினார்கள்; விவாதித்தார்கள். இறுதியில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது விருந்துபசாரம் நடைபெற வேண்டும் என்ற தீர்மானம் வெற்றிபெற்றது.

இறுதியில் அதிபர் எழுந்து உரையாற்றினார் 'அன்பான மாணவர்களே வணக்கம். உங்கள் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள். இதென்னடா இன்னும் இரண்டு மாதங்கள் நத்தாருக்குண்டே? இன்று ஏன் நத்தார் வாழ்த்துக்கள் சொல்லுகின்றாரே...? என்று நீங்கள் யோசிக்கலாம் உங்களுக்கும் இரண்டாம் வருட மாணவருக்கும் உள்ள பிரச்சினைகள் எனக்குப் புரியும். உங்கள் போக்கிலே இப்பிரச்சினையை விட்டுத்தீர்க்க எண்ணினேன்' இதோ பாருங்கள்! இவ்வளவு கசப்புணர்வுகள், பிரச்சினைகள் மத்தியிலும் நீங்கள் அவர்களை மன்னித்து விட்டீர்கள். ஒளியாக காட்சி தருகின்றீர்கள்; எனவே இன்று ஒளிவிழா என்பதில் என்ன தவறு? மார்கழி மாதம் 25ம் திகதி தான் கிறிஸ்து பிறக்கின்றார் என்று எண்ணுகின்றீர்களா? இல்லை எங்கு பிரச்சினை உள்ளதோ. எங்கு துன்பம், துயரம் உள்ளதோ அங்குதான் பாலன் பிறக்கின்றார். துன்பப்படும், பிரச்சனைப்படும் இடங்களில் தினமும் நத்தார்தான். எனவே உங்களுக்கு மீண்டும் 'நத்தார் சோபனங்கள்'.

மாணவர் அவர் பேச்சில் தம்மை மறந்து இலயித்து போயிருந்தனர்.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# - வாழ்த்து மனமே வாழ்த்து -

பாரிலுள்ள மக்களது
பாவம் தனை போக்கவென்று
மனிதனாக தவழ்ந்திட்டான்
மரியாளின் மடியினிலே
பாலன் முகம் பார்த்ததுமே
பாவந்தான் பறந்திடுமே
இனி யவன் பார்வையிலே
இல்லை தான் துன்பமே

✱

பாடு மனமே பாடு
பாவி நான் தனியனல்ல னென்று
போற்று மனமே போற்று
போகும் வழி துணையுண் டென்று
சாற்று மனமே சாற்று
சாவை நான் வெல்வே னென்று
தூற்று மனமே தூற்று
தூய வாழ்வு கிடைத்ததென்று

✱

தட்டு மனமே தட்டு
தளராத மனமுண் டென்று
மீட்டு மனமே மீட்டு
மீட்பொன்று வந்த தென்று
சொல்லு மனமே சொல்லு
பாவந்தான் செய்யே னென்று
வாழ்த்து மனமே வாழ்த்து
நல்வாழ்வு கிடைத்த தென்று

✱

**எஸ். ஜீவா**
களுவாஞ்சிக்குடி.

# தன்னை திருத்துங்கள்

இன்று —
இந்நாட்டு மக்களிடம்
ஏற்றத் தாழ்வுகளை
இல்லாமல் செய்துவிட்டு
எல்லோரும் ஓரினந்தான் - என
எடுத்துரைக்க வேண்டிய
ஆளும் வர்க்கமே
இன்னல்கள் விளைவித்தால்
அவர்களை
அரசியல் வாதிகள் என்பதா?
அல்ல!
ஜனநாயகப் போர்வையில்
நடமாடும் சர்வாதிகாரிகள்!
இறைவா! இதனால் தான்
உன் விழிகளின்
துரும்பை விலக்கினாலே
அயலவன் கண்ணின்
துரும்பை அகற்றலாம்
என்று நீ மொழிந்தாயோ!
ஆம்
சமுதாய நலனுக்காய்
தன்னையே அர்ப்பணித்தேன்
என — வெறும்
மாலைக்கும் மேடைக்கும்
மகத்துவம் தருகின்ற
சமுதாய தொண்டர்களே
முதலில்
தன்னை திருத்துங்கள்
சமூகம் —
தானாக திருந்தி விடும்.

**எம். எஸ். பெனடிக்**
லொயோலா இல்லம் மட்டக்களப்பு.


உங்கள் ஆக்கங்களை எழுதுங்கள்

**இளைஞர் அரங்கம்**
திரி/மட். இளைஞர் ஆணைக்குழு
20, மத்திய வீதி,
மட்டக்களப்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுமையற்ற தலைமுறை

— றெக்ஸ் ஜோசப்

**(இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் வாழ்ந்த WOLFGANG BORCHERT எழுதிய "GENERATION OHNE ABSCHIED" என்னும் ஜெர்மன் வரலாற்றுத் தத்துவத்தின் தமிழாக்கம்)**

**ஆதாரம் : DEUTSCHE KULTUR**

நாம் ஒரு அனுதைத் தலைமுறை
எமது ஆழமோ அதலபாதாளம்
நாம் ஒரு அதிஷ்டமற்ற தலைமுறை
வீடும் விடுதலையும் எமக்கில்லை.

எமது பகலவனில் ஒளியில்லை
எமது அன்பில் உணர்ச்சியில்லை
எமது இளைஞர்களில் வாலிபத்தின் துடிப்பில்லை

எமது தலைமுறைக்கு வேலியில்லை
கண்காணிப்பில்லை பாதுகாப்புமில்லை
தொட்டிலுக்கு வெளியே எறியப்பட்ட பிள்ளைபோல் —
எமது இன்றைய நிலையை விரும்பாத மூத்தோரால் உருவாக்கப்பட்ட
உலகில் நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம்.

உலகின் சூறுவளிகளுக்கு தாக்குப் பிடிக்கக்கூடிய விழுமியங்களை (தெய்வத்தை)
அவர்கள் எமக்குத் தரவில்லை
இதனுல் அவை எமது இதயங்களில்
நிரந்தரமாக ஒட்டிக் கொள்ளவும் முடியவில்லை.

எனவே

நாங்கள் இலட்சியங்கள் (தெய்வம்) அற்ற தலைமுறை
எங்களுக்கு பந்தங்களில்லை பாரம்பரியமும் இல்லை
எங்களை மதிப்பாரும் இல்லை
எமது கால்களும் இதயங்களும்
நாடோடிகள் போல
திசையெங்கும் அலைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் பூரணமற்ற தலைமுறை
அது என்னவென்பதே எங்களுக்குத் தெரியாது
பூரணமாக எங்களால் வாழவும் முடிவதில்லை
ஊனமுற்ற எங்கள் தலைமுறைக்கு
பூரணம் என்பது கொம்புத்தேன்.

நாங்கள் வீடு திரும்ப முடியாத தலைமுறை
ஏனெனில் நாங்கள் விரும்பி, பாதுகாத்து
பேணி சொந்தம் கொண்டாடக் கூடியது
எதுவும் அங்கில்லை.

ஆயினும்

நாங்கள் எதிர்காலம் (வருகை) உள்ள தலைமுறை
அவ்வெதிர்காலம்
புதியதோர் தாரகையிலிருந் உருவாகும்
புதியதொரு வாழ்வு
புதிய ஆதவனின் கீழ்
புதிய இதயங்கள் கொண்ட வாழ்வு.

அங்கு

புதிய நோக்கங்களும் அபிலாஷைகளும் இருக்கும்
துடிப்புள்ள அன்பும், செழுமையான சிரிப்பும்
புதிய இலட்சியங்களும் (தெய்வம்) அங்கு இருக்கும்
இன்று நாம் பூரணமற்ற தலைமுறைதான்
ஆயினும் — ஒன்று மட்டும் நிச்சயம்
எதிர்காலம் முழுவதும் நமதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைஞர் சந்திப்பு



# மாஸ்டர் சிவலிங்கம்

மட்டக்களப்பு மண் பாரம்பரியக் கலைகளின் விளைநிலம். இந்த மண்ணுக்கே சொந்தமான கலை வடிவங்கள் உண்டு. இவைகளை அன்றுமுதல் இன்று வரை அழிந்துவிடாமல் காப்பாற்றிவந்த பெருமை இங்குள்ள கலைஞர்களுக்கு உண்டு.

ஒரு காலத்தில் வீச்சோடு இயங்கிவந்த இக்கலைப் பாரம்பரியம் அண்மைக்காலங்களில் தளர்வு கண்டிருப்பது நன்ருகவே புரிகிறது. இதற்கு நாட்டில் தோன்றியுள்ள நெருக்கடியான சூழ்நிலையும் முக்கிய காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

இக்கலைஞர்கள் வரிசையில் இன்றும் நம்மோடு வாழ்ந்துகொண்டு, நமக்குப் பெருமை சேர்த்துக்கொண்டிருப்பவர் மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள். அவரது பெயரைச் சொன்னலே சிறுவர் முதல் பெரியவர்கள் அனைவருக்கும் குதூகலம் பொங்கிவழியும். அவரது நகைச்சுவைகள் நாடறிந்தவை. வீட்டுத் திண்ணைகள் முதல் சக்திமிக்க வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் வரை தமது முத்திரையைப் பதித்தவர். 'சிறுவர் கதை' உலகில் இவர் ஒரு ஜாம்பவான். ஆயிரக்கணக்கான கதைகளை வானொலியிலும், பத்திரிகைகளிலும், அரங்குகளிலும் அள்ளி இறைத்திருக்கிருர், இன்றும் இறைத்துக்கொண்டிருக்கிருர். அந்தத் துறையில் இறைக்க இறைக்க ஊரும் ஊருணி இவர். நகைச்சுவை நாடகங்களும் இவருக்கு கைவந்த கலை. நானறிந்த வரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வில்லுப்பாட்டை அறிமுகப்படுத்தியவர் இவரென்றே நம்புகிறேன்.

ஏறக்குறைய 23 வருடங்களுக்கு முன்பு இவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் பெயர் பெற்ற கலைஞராக விளங்கிய திரு. எம். எஸ். பாலு அவர்களின் இல்லத்திலே சந்தித்தேன். இங்கே இளந் தலைமுறையினருக்காக திரு. எம். எஸ். பாலு அவர்களைப் பற்றிக் கூறுவது அவசியம் என்று கருதுகிறேன்.



எம். எஸ். பாலு

மட்டக்களப்பில் இன்று சிறந்து விளங்கும் பல கலைஞர்களை உருவாக்கிய பெருமை இவருக்கு உண்டு. கவிஞர் காசி ஆனந்தன், நாகராஜன், அன்பு முகைதீன், சங்கீத பூஷணம் திரு. ஜப்பார், திருகோணமலை கவிராயர் இன்னும்பல எழுத்தாளர்கள், மட்டக்களப்பு அரசியல்வாதிகள் என்று பலர் இவரிடம் 'பாடம்' படித்தவர்கள். சிறுகதை, கவிதை, நாடகம், இசை, மேடைப்பேச்சு என்று பல துறையிலும் வித்தகராக இருந்த எம். எஸ். பாலு அவர்கள் எனது தந்தையின் கூடப்பிறந்த சகோதரியின் கணவர். அதாவது எனது மாமன். என் உள்ளத்தில் தேங்கிக்கிடந்த கலையார்வத்துக்கு ஓர் உந்து சக்தி இவர் என்று கூறுவது பொருத்தமானது. சிறுவயதில் இவரது இல்லத்துக்கு அடிக்கடி செல்வேன். அங்குவரும் கலைஞர்களை - அறிஞர்களைக் காண்பதும், அவர்களது பேச்சுக்களைக் கேட்பதும் எனக்கு மிகவும் பிடித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானது. அதனுல் எங்கள் வீட்டில் சொல்லிக் கொள்ளாமலே மாமன் வீட்டில் வந்து தங்கி எனது தாயாரிடம் அடிவாங்கிய அனுபவமும் உண்டு.

இந்த எம். எஸ். பாலுவின் இல்லத்தில் தான் மாஸ்டர் சிவலிங்கம் அவர்களை முதன் முதல் சந்தித்தேன். அப்போதுதான் அவர் தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்ததாகக் கூறிஞர்கள் அன்று அவருடன் என்ன பேசினேன் என்று நினைவில்லை. இன்று வாசக நேயர்களுக்காக அவரோடு பேசப்போகிறேன்.

★ வணக்கம் மாஸ்டர் சிவலிங்கம் அவர்களே!

o வணக்கம்

(தொண்டன் சஞ்சிகை சார்பாகப் பேட்டிகான விரும்புவதாகக் கூறிவிட்டு)

★ உங்கள் ஆரம்பகால வாழ்க்கையைப்பற்றி வாசகர்களுக்கு சொல்லுங்களேன்...

o நான் மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய்க் கிராமத்தில் பிறந்தேன். என்னுடைய தந்தையார் இரத்தினம் ஆசிரியர். தாய் செல்லத்தங்கம். எங்கள் உறவினர் பலர் ஆசிரியர்களாக இருந்தார்கள். எங்கள் குடும்பத்தாரை 'வாத்தி கத்தறை' என்றே சொல்வார்கள். எல்லோரையும் மாஸ்டர் மாஸ்டர் என்றே அழைப்பார்கள். இப்படித்தான் நான் சிறு வயதிலேயே மாஸ்டர் சிவலிங்கம் ஆனேன். இதையே பிற்காலத்தில் நானும் பயன்படுத்தினேன். ஆரம்பத்தில் நான் கல்லடியிலுள்ள சிவானந்தா வித்தியாலயத்தில் ஏழாம் வகுப்புவரை பயின்றேன். பின்பு தற்போது கோட்டைமுனை மகா வித்தியாலயம் என்று அழைக்கப்படும் அரசினர் கல்லூரியில் எஸ்.எஸ்.சி. வரைபடித்தேன்.பின்பு ஓவியத் துறையில் எனக்குஆர்வமிருந்ததால் ஓவியம் பயில்வதற்காக இந்தியாவுக்குச் சென்று ஓவியமும் சிறிதுகாலம் பயின்றேன். அதன்பின்பு இங்குவந்து சிந்தாமணி பத்திரிகையில் சிறுவர் பகுதியில் பொறுப்பாசிரியராக வேலைக்கு அமர்ந்தேன். அக்காலத்தில்தான் வாஞெலியிலும் சிறுவர் கதைகள் தொடர்ந்து சொல்ல வாய்ப்புக் கிடைத்தது.

★ பொதுவாக சிறுவர் இலக்கியங்களில் ஈடுபடுபவர்கள் மிகக்குறைவு. உங்களுக்கு இதில் ஈடுபடவேண்டும் என்ற ஆர்வம் எப்படி ஏற்பட்டது?

o நான் சிறு பையனுக இருக்கும்போது திருச்சி வாஞெலியை ஒருமுறை கேட்டேன். அதிலே வாஞெலி அண்ணு கதை சொல்லிக்கொண்டிருந்தார். அதைக் கேட்டுக்கொண்டிருந்தபோது இதைப்போல் நாமும் சொன்னுல் என்ன என்ற எண்ணம் வந்தது கதையைக் கேட்டுக்கொண்டிருந்தபோதே 'இந்த இடத்தில் இப்படிச் சொல்லியிருக்கலாம். குரலை இப்படி மாற்றியிருந்தால் இன்னும் நன்ருக இருந்திருக்கும் என்றெல்லாம் எண்ணினேன். பின்பு நானே சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டு கதை சொல்லத்தொடங்கினேன். இதைப்பார்த்த சிலர் 'தம்பி இப்படிக் கதை சொல்வது அபூர்வம். இதில் நீ தொடர்ந்து ஈடுபட்டால் வருங்காலத்தில் நல்லாக் கதை சொல்லலாம்' என்று கூறிஞர்கள். இந்த உற்சாகமூட்டுதல்களால் கதை சொல்லிவந்தேன். எதற்கும் பயிற்சி வேண்டும். அதனுல் எங்கள் கிராமத்தில் இருந்த கண்ணகி அம்மன் கோயில் பக்கம் சென்று தனிமையில் வாய்விட்டு கதை சொல்வேன். என் சத்தத்தை நானே கேட்டு எப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம் தீர்மானிப்பேன். இவ்வாறு பயிற்சி செய்தேன். நான் இந்தியாவில் இருக்கும்போது குழந்தைக் கவிஞர் அழவள்ளியப்பா அவர்களின் வீட்டுக்குச் செல்வதுண்டு. அங்கு பக்கத்து வீட்டுப் பிள்ளைகள் எல்லாம் வருவார்கள். அவர்களுக்கு நான் கதை சொல்லுவேன். இதைக் கவனித்த கவிஞர் அழவள்ளியப்பா அவர்கள் ஒருநாள் என்னிடம் 'கதை சொல்வது அருமையான ஒரு கலை' இந்தக்காலத்தில் பெரும்பாலும் யார் இதைக் கவனிக்கிருர்கள். நீங்கள் கதை சொல்லும்போது நான் சிலசில விஷயங்களை அவதானித்தேன். உங்களுக்கு கதை சொல்லுகின்ற ஆற்றல் இயற்கையாகவே இறைவஞல் அளிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் நீங்கள் முயற்சி செய்தால் எதிர்காலத்தில் சிறந்த முறையில் கதை சொல்பவராக நீங்கள் வரலாம்' என்று பாராட்டிஞர். இதைத் தொடர்ந்து கதைசொல்லும் ஆசை இன்னும் அதிகரித்தது.

என்னுடைய ஆர்வத்துக்குக் காரணமாக இருந்த இன்ஞெருவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை. இவர் என்னுடைய ஆசிரியர். பாடசாலையில் மாணவர் மன்றங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் கதை சொல்ல வைத்து உற்சாகப்படுத்திய வர் முதன் முதல் வானொலியில் சிறுவர் மலரில் கதை சொல்ல வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தவரும் இவர்தான். இதைத் தொடர்ந்து வானொலியில் எனக்கு பல வாய்ப்புகள் கிடைத்தன. என்னை உற்சாகப்படுத்திய இன்னொருவர் எம் எஸ். பாலு என்று சொல்லப்படும் பாலு மாஸ்டர். எமது நிகழ்ச்சிகள் எங்கு நடந்தாலும் அங்கு வந்துவிடுவார். நிகழ்ச்சி முடிந்ததும் பாராட்டுவதோடு இன்னும் எப்படி எப்படி செய்தால் நன்ருக இருக்கும் என்றும் எங்களுக்குச் சொல்லித்தந்து உற்சாகபபடுத்துவார். பல இளங் கலைஞர்களை முன்னுக்குக் கொண்டுவந்த இவரும் எமது ஆர்வத்துக்கும், ஈடுபாட்டுக்கும் ஒரு காரணம் என்பதை என்னுல் மறக்கமுடியாது.

இன்று பொது நூல் நிலையத்தில் சிறுவர் கதை வேளை நிகழ்ச்சியை ஏற்படுத்தி அதற்குப் பொறுப்பாக என்னை நியமித்த மட்டக்களப்பு முன்னுள் ஆணையாளர் திரு. பெனடிக்ற் தார்சீசியஸ் அவர்களுக்கும், கதை சொல்வதற்கு எனக்குப் பல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் ஆலோசனையும் வழங்கிவரும் பொது நூல் நிலைய நூலகர் திரு சி. சின்ன ராசா அவர்களுக்கும் நான் நன்றி தெரிவிககக் கடமைப் பட்டுள்ளேன்.

(அவருடைய சுவையான நீண்ட பதிலைக் கேட்டபின் கவிஞர் அழவள்ளியப்பா அவர்கள் கூறியதுபோல் கதை சொல்லும் ஆற்றல் இறைவனுல்தான் இவருக்கு வந்திருக்க வேண்டும் என்று நாமும் உறுதிப்படுத்திக்கொண்டோம். அதை வாய்விட்டே அவரிடமும் கூறிஞேம்)

★ பொதுவாக சிறுவர் இலக்கிய வெளியீடுகள் மிகக் குறைவாகவே உள்ளன. உங்கள் படைப்புகளை நூல் வடிவில் வெளியிட்டால் சிறுவர் உலகம் இன்னும் பரந்த அளவில் பயன்பெறுமல்லவா?

o இப்படியொரு எண்ணம் எனக்கும் இருந்தது. நான் பத்திரிகையில் இருந்து ஓய்வு பெற்றபின் எனது கதைகளை எல்லாம் நூல் வடிவாக்க வேண்டும் என்று பத்துப் புத்தகங்களுக்குரிய கதைகளை எல்லாம் சேகரித்து வைத்திருந்தேன். ஆனுல் 1983ம் ஆண்டு இனக்கலவரத்தின்போது கொழும்பில் இருந்த எனது இல்லம் எரிக்கப்பட்டு பொருட்கள் எல்லாம் அழிந்தபோது அவையும் எரிந்து அழிந்துவிட்டன.நான் மனைவியிடம் அடிக்கடி கூறுவேன். வீடு, பொருள் அழிந்ததைவிட, நான் சேகரித்து வைத்த கதைகள் அழிந்ததுதான் பெரிய இழப்பு. வீட்டையும் பொருளையும் ஓரளவு மீண்டும் தேடிவிட்டோம், ஆனுல் எனது இலக்கியச் செல்வங்கள் மீண்டும் கிடைக்குமா? அதிலிருந்து ஏற்பட்ட விரக்தியின் காரணமாக பின்பு நான் எழுதிய கதைகள் எதையுமே சேகரித்து வைக்கவில்லை. இப்போது எனது மகன் வெளிவரும் கதைகளை வெட்டி எடுத்து வைத்துக்கொண்டிருக்கிருர். அண்மையில் நாவற்குடாவைச் சேர்ந்த ஒரு சங்கத்தினர் வந்து 'எனது கதைகளை புத்தகமாக வெளியிட விரும்புவதாகக் கூறினர். ஆலோசனையைக் கேட்டனர். முதல் இருந்த ஆர்வம் குன்றிவிட்ட நிலையில் பொறுத்துச் சொல்லுவதாகக் கூறியுள்ளேன்.

(இனக்கலவரம் விளைத்த கொடுமைகளில் மிகப்பெரியது அரிய இலக்கியச் செல்வங்களை எல்லாம் அழித்து ஒழித்தமையே என்று நாமும் வருந்திஞேம். நூல் வெளியீடுகள் பெரும் சுமையாகியுள்ள இக் காலத்தில் தனிமனிதரைச் சுமக்கவிடாது பொது நிறுவனங்கள்தான் முன்வந்து தரமான படைப்புக்களை வெளியிட்டு படைப்பாளிகளை உற்சாகப்படுத்தி வளர்த்து விடுவதோடு, மக்கள் மத்தியில் பரப்பி பயனடையச் செய்ய வேண்டும் என்று எண்ணிஞேம்)

★ தமிழ்நாட்டிலே ஓவியம் பயின்றதாகக் குறிப்பிட்டீர்கள். உங்களை ஓவியனுக நான் அறிந்ததே இல்லையே...

o நான் ஓவியம் படிக்கத்தான் இந்தியா சென்றேன். ஆனுல் அங்கு வேறுவேறு கலைகளைக் கண்டதும் குறிப்பாக வில்லுப்பாட்டு போன்றவற்றில் அதிக ஈடுபாடு கொண்டேன்.

★ ஆமாம். உங்கள் வில்லுப் பாட்டைக் கேட்டிருக்கிறேன். மட்டக்களப்பில் முதன்முதல் வில்லுப்பாட்டை அறிமுகப் படுத்தியது நீங்கள் என்றே எண்ணுகிறேன். இப்போது வில்லுப்பாட்டில் உங்கள் ஈடுபாடு எப்படி?

o 1960ஆம் ஆண்டு முதன் முதல் கல்லடி சித்திவிநாயகர் ஆலயத்தில் 'நமக்கு மேலே ஒருவனடா' என்ற தலைப்பில் வில்லுப்பாட்டு நடத்திஞேம். அதைத்தொடர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வில்லுப்பாட்டுகள் நடத்தியுள்ளோம். நூருவது வில்லுப் பாட்டு மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் நான் என்னுடைய குழு வினருக்கு வெள்ளிப் பதக்கம் சூட்டி கௌரவித்தேன். அதே விழாவில் வின்சன்ட் மகளிர் கல்லூரி அதிபர் - மாணவிகள் சார்பில் பொன்னுடை போர்த்தி, தங்கப்பதக்கம் சூட்டி கௌரவித்தார்கள். அந்த விழாவுக்குத் தலைமைதாங்கிய பண்டிதர் வி. சி கந்தையா அவர்கள் எனக்கு 'வில்லிசைச் செல்வன் என்ற பட்டமளித்தார்.

★ நீங்கள் பெற்ற வேறு விருதுகள், பாராட்டுக்கள் பற்றி...

o வில்லுப்பாட்டைப் பொறுத்த அளவில் பல இடங்கவில் பாராட்டுப் பெற்றுள்ளேன். அவற்றில் ஒன்றை மட்டும் என்னால் மறக்கமுடியாது. தமிழரசுத் தந்தை செல்வநாயகம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் எங்கள் வில்லுப்பாட்டைப் பார்த்துவிட்டு, மட்டக்களப்புக்கு வந்தபோது பாட்டாளிபுரத்தில் (தற்போது புதிய பஸ் நிலையம்) நடந்த கூட்டத்தில் பொன்னுடை போர்த்தி கௌரவித்ததை வாழ்வில் மறக்கமுடியாத பெரு நிகழ்ச்சியாகக் கருதுகிறேன்.

★ நீங்கள் புரிந்த சாதனைகள் என்று ஏதாவது குறிப்பிட முடியுமா?

o மட்டக்களப்பில் கலைஞர்கள் - கலைவல்லுநர்கள் இல்லை என்ற தவறான ஒரு அபிப்பிராயம் உண்டு. இது உண்மையல்ல வாய்ப்பு, வசதி இன்மையால் இலைமறைகாயாக உள்ளனர். எங்களுக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி நாங்கள் புற இடங்களில் வில்லுப்பாட்டுச் செய்தபோதெல்லாம் அறிவித்தல்களில் மட்டக்களப்பு மாஸ்டர் சிவலிங்கம் குழுவினர் என்றே போட வேண்டும் என்று கூறுவேன். இன்னும் எங்கு போனாலும் எந்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளிலும் மட்டக்களப்பு புகழை சிறப்பை அதிலே சேர்த்துவிடுவோம்

(அதை பாடிக்காண்பிக்கிறார்)

இவ்வாறு எல்லா இடங்களிலும் நாம் பிறந்த மண்ணைப்பற்றி - அதன் சிறப்பு பற்றி தெரிவித்துள்ளதை சாதனை என்று சொல்லாவிட்டாலும் ஒரு சேவை என்றே எண்ணுகிறேன்.

ஆற்றல்மிக்க இந்த நல்ல கலைஞர் நம்மவர். என்ற பெருமிதத்தோடு, இன்னும் தமது கலை ஆற்றலால் சாதனைகள், பாராட்டுக்கள் பெற்றும் சிறக்கவேண்டும் என்று நெஞ்சார வாழ்த்திக்கொண்டு நன்றி கூறி விடை பெற்றோம்)

பேட்டித் தொகுப்பு :
**மலர்வேந்தன்.**


★ பிரிண்டிங் புளக்குகள்
★ கலர் புகைப்படங்கள் கழுவுதல்
★ கலர் புகைப்படங்கள் எடுத்தல்
★ கறுப்பு, வெள்ளை புகைப்படங்கள்
★ பாஸ்போட், அடையாள அட்டை

மற்றும் எல்லாவிதமான புகைப்படங்களும்
உடனுக்குடன்
குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படும்

உங்கள் நல்வரவை நாடும்

**ஸ்ருடியோ ஏஞ்ஜல்**

ஆயர் இல்லம், மட்டக்களப்பு.

☎ 065-2723




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை வேண்டி நின்றபோது...

கஷ்டங்களும் சஞ்சலங்களும் மனித வாழ்வின் ஒருபக்கம் — நியதியானவை. இவ்வேளையில் ஆறுதலும், அரவணைப்பும் தேடி, இதயம் ஏங்கி நிற்கிறது. சாந்தியையும் சமாதானத்தையும் உள்ளம் அவாவி நிற்கின்றது துன்பங்கள், கஷ்டங்கள் தொடர்ந்து வரும்போது வாழ்க்கையே வெறுத்துப் போகின்றது. தொடர்ந்து அமிழ்ந்து கொண்டிருக்கும் நேரத்தில் அடுத்த வருடைய உதவிக்காக எதிர்பார்த்து நிற்கும் நிலை தோன்றுகின்றது.

இதற்கு, பழைய ஏற்பாட்டிலுள்ள இஸ்ராயேல் மக்களின் வரலாறு நல்லதொரு உதாரணமாகும். பல ஆண்டுகளாக பல அரசர்களினுலும் அடிமைப்படுத்தப்பட்டு தாங்க முடியாத வேதனைகளை அனுபவித்தவர்கள் மோயீசனுலும், யோசுவாவினுலும் வழிநடத்தப்பட்டும் எதிர்பார்த்த விடுதலை பெறமுடியவில்லை. யோசுவாவுக்குப் பின்னர் இவர்களுக்கென்று ஒரு தலைவர் இருக்கவில்லை. ஒவ்வொரு பகுதிகளில் தனித்தனியே பிரிந்து சுதந்திரமாக வாழ்ந்த நேரத்திலும் கூட பபிலோனியர்களால் மீண்டும் நாடு கடத்தப்பட்டவர்கள்.

பபிலோனியரால் நாடு கடத்தப்பட முன்பு தாவீது, சலமோன் என்ற பெருமை பெற்ற அரசர்களும் இஸ்ராயேல் மக்களை தலைமைப்படுத்தினுலும் கூட இவர்களுக்குப் பின் இஸ்ராயேலரின் ஒற்றுமை சிதைந்து போனது. ஆகவே பபிலோனியர்களால் முக்கியமாக நபுக்கோதனசாரால் நாடு கடத்தப்பட்டு வெவ்வேறு இடங்களில் குடியேற்றப்பட்டனர்.

இறைவனது எண்ணத்தை திட்டத்தை அவர்களிடமிருந்து அறிந்து மக்களுக்கு அறிவிப்பவர்கள் இறைவாக்கினர், இஸ்ராயேல் மக்கள் பற்றி இறைவன் கொண்டிருந்த திட்டத்தை பல இறைவாக்கினர்கள் வெளிப்படுத்தினுர்கள். இவர்களுள் இசையால் இறைவாக்கினர் இஸ்ராயேல் மக்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்க மெசியா வருகிறுர் என்பது பற்றி பல இடங்களில் குறிப்புட்டுள்ளார்.

விடுதலை வேண்டி நின்ற இஸ்ராயேல் மக்களுக்கு இசையாசின் இறைவாக்கு ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றுகத் தென்பட்டது. விடுதலை பெற்றுத்தரும் அரசனை மக்கள் எதிர்பார்த்து நின்றனர். வலிமை பெற்ற அந்த அரசனின் தலைமையில் தங்கள் சுதந்திரத்தை நாடி நின்றனர்.

உரோமையர்களின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் விடுதலை பெற்றுத்தரும் அந்த அரசன் பெத்தலகேமின் சரித்திரத்தில் ஏழையாகப் பிறந்தான். மனிதனின்

**எல். அலெக்சாண்டர்**

எண்ணங்களுக்கும், இறைவனின் திட்டங்க

---

## தொண்டனுக்குப் பரிசு

மட்டக்களப்பு மாவட்ட சர்வோதய நிலையத்தினரால் அண்மையில் நடாத்தப்பட்ட சஞ்சிகைக் கண்காட்சிக்கான போட்டியில் 'தொண்டன் பரிசு பெற்றுள்ளது.


அனைத்திலங்கை அளவில் வெளிவரும் சஞ்சிகைகள் பலவும் கலந்துகொண்ட இப்போட்டியில் முதலாம் இடத்தை 'மல்லிகை' யும் இரண்டாம் இடத்தை 'தொண்டனும்', மூன்ரும் இடத்தை 'சிரித்திரனும்' பிடித்துக்கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கும் முடிச்சுப் போட முடியாது. முழு மனித விடுதலை இறைவனின் திட்டம், லௌகீகவிடுதலை மனிதனின் எண்ணம்.

பாவம் செய்வதனுல் மனிதன் இறைவனை விட்டுப் பிரிந்தான் ஆனுல் இறைவனே அளவில்லா இரக்கத்தின் காரணமாக மனிதனைத்



தேடி வந்தார் தனது வாக்குறுதியை இறைவன் நிறைவேற்றிக் கொண்டார். அறுந்து போன உறவுக்கு சிலுவை — இரட்சணியம் — -பாலமாக நிற்கிறது.

''நீ அரசனே? உமது இராச்சியம் எங்கே உள்ளது'' மனந்திறந்து கேட்டான் பிலாத்து. நீண்ட நாட்களாகவே பலரையும் நெருடிக் கொண்டிருந்தவினு அது. ஓ! இஸ்ராயேல் மக்களுக்குவிடுதலைவேண்டி வந்தவன் இந்த நசரேனுவாகிய இயேசுவோ? அப்படியானுல்,கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவிக்கும் அந்த பறபாஸ் யார்? அவனும் விடுதலை, சுதந்திரம், தனிநாடு இவைகளைக் கேட்டபடியால் தான் இன்று சிறைவாசம் அனுபவிக்கிறுன். இருவரில் யார் புரட்சிவாதி? யார் பயங்கரவாதி? மக்களே தீர்மானிக்கட்டும்.

''பறபாஸ் விடுதலை செய்யப்பட வேண்டும்'' — சனநாயகத் தீர்ப்பு மக்கள் எதிர்பார்த்த விடுதலை வீரன் அவன். எனவே அவனுக்கு விடுதலை கிடைத்தது. ஆனுல் இயேசுவோ தேவதூஷணம் பேசியவன். ''எனது அரசு இவ் உலகைச் சார்ந்ததல்ல.'' இதை விட சான்றுகளும் உண்டோ? ஆகவே இயேசு கொலையுண்டார்.

இங்கு அனுபவிக்கும் துன்பங்கள் அனித்தியமானவை. மறு உலக வாழ்வு நித்தியமானவை. இதில் நல்ல பங்கை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த நல்ல பங்கினை தெரிந்து கொள்ளவே கிறீஸ்து பிறந்தார் பிறப்பின் நோக்கம், பாவ நாட்டம் கொண்டு இறைவனை விட்டுப் பிரிந்து போன மனிதனை மீண்டும் அணைத்துக் கொள்ள விருப்பம் கொண்டார். லௌகீக துன்பங்களை வெற்றி கொள்ள மெசியா என்ற மீட்பை மக்கள் எதிர்பாத்தனர். இறைவன் தன் வாக்குறுதியை மீறவில்லை. வார்த்தை மனுவுருவானது.

இன்றைய நமது சூழல் துன்பமானது தான் ஒவ்வொரு நிமிடமும் விடுதலையை எதிர்பாத்துக் கொண்டிருக்கிறோம். விடுதலை எதிர்பார்க்கும் மக்கள் மத்தியில் தான் கிறிஸ்து பிறக்கிறுர். இவர் பிறந்ததினுல் இறைவனுக்கு மகிமையும் நல் மனத்தோருக்கு அமைதியும் ஆகிறது.

உங்கள் பாடசாலை உபகரணங்களுக்கு
நாடவேண்டிய சிறந்த இடம்

மிருணாஸ்

14, தோமஸ் லேன்
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிகைக்காலப் பரிசுகள்

- ஆழியோன் -

நீண்டநாள் இடைவெளிக்குப்பின் நான் நாடு திரும்பியிருந்தேன். அந்நிய நாட்டில் நீண்ட காலம் உழைத்தபின் வயதான பெற்றோருக்கு அனுசரணையாக இருக்கவேண்டும் என்ற எண்ணம் தான் என் பிறநாட்டு வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தது விமானத்தில் கொழும்பு வந்து பின் வழியெல்லாம் பரிசோதனைகளை முடித்து ஊர்வந்துசேர பெரும்பாடாகிவிட்டது. அந்நிய நாட்டில் இருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் தாண்டி கொழும்புவரை சில மணித்தியாலங்களே தேவைப்பட்டன; ஆனால் கொழும்பில் இருந்து ஊர்வரத்தான் ஒரு முழுநாள் தேவைப்பட்டது. பாடசாலை, பல்கலைக்கழகம் என்பனவற்றில் படித்து பட்டம் பெறத்தான் பல ஆய்வுகூட பரிசோதனைகளை செய்து அனுபவப்பட்டிருந்தேன்; இப்போதோ ஆயுதப்படை பரிசோதனையிலும் அனுபவப்பட்டுவிட்டேன். இதற்கிடையில் சுங்கப் பரிசோதனை வேறு வாழ்வெல்லாம் பரிசோதனை தான் போலும்.

என் வாழ்விலும் பல சோதனைகள். சிறு வயதில் இருந்தே சோற்றுக்கு கஷ்டப்பட்டது 'கொலரா' நோயில் என்னைத்தவிர அனைத்து சகோதரங்களையும் என் பெற்றோர் பறிகொடுத்தது; என் மனைவியையே விபத்தில் பறிகொடுத்தது... இவைகள் தான் என்னிடம் இருந்த இறைபற்றை அறுத்துவிட்ட காரணங்கள்; இவற்றால் தான் என் இரத்தம் அல்ககோலால் நிரம்ப ஆரம்பித்தது. இந்த நாடே பிடிக்கவில்லை ஐரோப்பிய நாடு சென்றேன்; நன்கு பொருள் சம்பாதித்தேன்; பெற்றோரை பணத்தால் நிரப்பினேன். அவர்களின் பிற்பாடு நான்...? என் எதிர்காலம் என்று ஒன்று இல்லை. முடியும் வரை குடிப்பேன்: குடித்துக் கொண்டே மரிப்பேன்.

''இந்தா மகன் கோப்பி'' சிந்தனை கலைந்துவிட அம்மாவிடம் இருந்து கோப்பியை பெற்றுக்கொண்டேன். 'என்ன மன ஒரே யோசனையா இருக்கா... வெளிநாட்டில இருந்து வந்தனீ ஒருக்கா வெளியபோயி தெரிஞ்ச சாதிசனத்த பாத்திட்டு வாவன்' நான் ஒன்றும் பேசாது கோப்பியை உறுஞ்சினேன். அம்மா தொடர்ந்தாள் 'இன்னமும் நீ தனிக் கட்டையா இருக்கா. இனியும் இப்படி இருக்கக்கூடா... நானும் அப்பாவும் இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் இருப்பமோ தெரியா... கண்ண மூடுறத்துக்குள்ள நீ ஒரு கலியாணம் பண்ணிக்க... நீயாவே ஆரையும் பாத்துச்சொன்னா நல்லம்... இல்லாட்டி அப்பாட்ட சொல்லிச்சரி...' அம்மா முடிக்க முன்னமே நான் படாரென கோப்பிக் கோப்பையை மேசையில் வைத்தேன். 'என்னட்ட என்னத்த வேண்டுமெண்டாலும் சொல்லுங்க... இந்தக் கலியாணகத மட்டும் வேணும்' நான் உறுதியோடு சொன்னேன். 'நல்லா யோசிச்சுப்பாரு... நீ நெடுக இப்படியே இருக்க ஏலாது. இந்த வீட்டையும் இரண்டு சின்னஞ்சிறுசுகள் ஓடித்திரிஞ்சா எவ்வளவு கலகலப்பா இருக்கும்... எங்களுக்கும் எவ்வளவு ஆறுதலா இருக்கும்' 'என்னக் கொஞ்சம் சும்மா விடமாட்டீங்களா...? என்றவாறு கிணற்றடிக்குப் போய் முகம்கைகால் கழுவி, உடுப்பு மாற்றி வெளியில் புறப்பட்டேன். 'ஆருட்ட போகலாம்' என்று மனம் எண்ணியது. கடைசியில் என் சிறு வயது நண்பனான சிவநாதனின் வீடுநோக்கி நடந்தேன்.

° ° °

சிவநாதன் வீட்டில் இருந்தான். இருவரும் பழையநாள் கதைகளையெல்லாம் நிரம்பக் கதைத்தோம். அவனுடைய

எந்த வேலையையும் 'முடியுமா' என்ற சந்தேகத்தோடு தொடங்காது, 'இதை எப்படி நன்றாக முடிக்கலாம்' என்ற கேள்வியோடு தொடங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சிறுகதை

பிள்ளைகளுக்கு கொஞ்சம் பரிசுப் பொருட்களைக் கொடுத்தேன். சிவநாதனின் மனைவி சிற்றுண்டிகளையும், தேனீரையும் கொண்டுவந்து தந்தார் 'றெபின் சாப்பிடுறானில்ல...' என்று கூறிய சிவநாதன் என்னை நோக்கி, 'ஜோர்ஜ், என்னட்ட ஒரு பொடியன் இருக்கான். திருகோணமலையில என்ட ஒபீசுக்கு கிட்ட இருக்கிற வீட்டிலதான் அவன் தன்ட அம்மாவோட இருந்தான் அவள் செத்துப்போயிட்டாள். இந்த பொடியன்ட தகப்பன் மறியல்ல ஆயுள் தண்டனை அனுபவிக்கிறான். இவன் தங்கச்சி ஒருத்தி எங்கேயோ ஒரு வீட்ல வேலைக்கு இருக்கிறாள் போல கிடக்கு... இங்க அநாத மடத்தில சேர்ப்பம் எண்டு கூட்டிவந்தனான்' என்று சொன்னான்.

அந்தச் சிறுவனுக்கு சுமார் பத்து வயதிருக்கும்; கவலை தோய்ந்த முகம்; மிரண்ட சுபாவம். அவனைப்பார்க்க பரிதாபமாக இருந்தது. அவனுக்கு என்று யாரும் இல்லை சில வேளை நானும் இப்படித்தான் அனாதையாகி விடுவேனோ? மனதில் பளிச்சென்று ஓர் தீர்மானம் எடுத்தேன். 'சிவா! இந்த பொடியன என்னோட விடு, வீட்ட அம்மாவுக்கு துணையாயிருக்கும்' என்று சிவநாதனிடம் சொன்னேன். அவனும் சம்மதித்தான்.

o o o

றெபின் எங்கள் வீட்டுக்குவந்து இரண்டு நாட்களாகிவிட்டன அம்மாவின் அன்பான உபசரிப்பால் அவன் சற்று தேறி இருந்தான் அவனுக்கு தலைமுடியை வெட்ட வைத்து புதிய ஆடைகள் வாங்கிக் கொடுத்தேன் 'றெபின் இஞ்ச வா..'



'என்ன சின்னய்யா?' என்றவாறு கூப்பிட்ட என்னிடம் வந்தான்.

'கிறிஸ்மஸ் முடிஞ்சு தை மாசம் தொடங்க நீ பள்ளிக்கூடம் போகவேணும்... என்ன சரியா...?' என்றேன்.

'சரி...' என்றவன் அழத் தொடங்கினான்.

'ஏன் அழுகிறாய்?'

'என்ட தங்கச்சி எனக்கு வேணும்...' அழுகை தொடர்ந்தது.

'தங்கச்சி எங்க இருக்கிறாள்?'

'அப்பா அவள ஆருட்டையோ ஈடுவைச்சிப் போட்டார்'

'ஈடு வைச்சவரோ...'

ஓம் ஈடுவைச்சி காசு வாங்கி சாராயம் குடிச்சவர்' அழுது அழுது சொன்னான்.

'சரியாக் குடிக்கிறவர்... அம்மாவையும் என்னையும் அடிக்கிறவர்...' என்று கூறியவன் என் மேசைமீது இருந்த சாராயப் போத்தலைக் கண்டதும் 'வீல்' என்று அலறியவாறு மயங்கி வீழ்ந்தான். அவனைத் தூக்கி கட்டிலில் கிடத்திவிட்டு முதல் வேலையாக சாராயப் போத்தலை எடுத்து அலமாரியின்பின் ஒழித்து வைத்தேன். இவனுக்கு 'அலேர்ஜி' போல் உள்ளது. இச்சாராயம் தானே இப்பையனின் குடும்பத்தை சீரழித்து விட்டது.

o o o

சிவநாதனின் உதவியுடன் சிறைச்சாலை சென்று ''றெபி'னின் தகப்பனை சந்தித்து, பின் றெபினின் தங்கை இருக்கும் வீட்டைக் கண்டுபிடித்து அவளை வீட்டுக்கு கூட்டிக் கொண்டு வரும்போது இரவாகிவிட்டது. இச்சிறிய பாலகியை வேலைக்குவிட்டு உழைத்துக் குடித்திருக்கிறானே? மனச்சாட்சியில்லாத குடிகாரன். (நான் மட்டும் என்னவாம்?) வீடு வரும்போது றெபின் நன்கு நித்திரை செய்துகொண்டிருந்தான். என் தோளில் றெபினின் தங்கை உறங்கி வழிந்துகொண்டிருந்தாள்

(தொடர்ச்சி 28 பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறையைத் தெரிந்துகொள்வோம்

றெக்ஸ்

கேள்வி ;

பேய்கள் பற்றிய உங்கள் கருத்து என்ன?

**J. R. புளோரன்ஸ்**
மணற்சேனை

பதில் :

பேய்கள் அல்லது அசுத்த ஆவிகள் எனக் குறிக்கப்படுகின்ற இவற்றிற்கு திருமறை நூலில் பல பெயர்கள் உண்டு. சோதனை செய்வோன், அவதூறு சொல்வோன், தண்டம் கொடுப்போன், பிறஜாதியரின் தெய்வம் என்பன அவற்றுட்சில எபிரேய மொழியில் 'சாத்தான்' என்பதும் கிரேக்க மொழியில் 'டியாபொளொஸ்' என்பதும் நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணை செய்து குழப்பியடிக்கும் புறொசிக்யூட்டர் என்னும் கருத்தைக் குறிக்கும் அதாவது தெய்வ நீதிமன்றத்தில், மனிதனைக் (ஆத்மாவை) குற்றவாளியென நிரூபிக்கும் அதிகாரிதான் இந்த சாத்தான் அல்லது டியாபொலொஸ். யோபு ஆகமத்தில் 1/6 - 12 வசனங்களில் இதற்கு அத்தாட்சி உண்டு. இந்த அதிகாரிக்குத் தண்டனை கொடுக்கவும், மனிதனுக்கு உடல் உள ரீதியான கேடுகளை வருவிக்க அசாதாராணமான வல்லமை உண்டென்பதும் இங்கு புலனாகிறது. இந்த ரீதியிலேயே நற்செய்திகளில் மனிதர்கள் உடல் - உள வேதனைகளினால் துன்புறுவதையும் இறைமகன் யேசுவினால் அவர்கள் விடுவிக்கப்படுவதையும் காண்கின்றோம். இவற்றை மேற்கொள்ள இறைவனால் அளிக்கப்படும் வல்லமையும், செபம்' தபம் முதலிய நற்கிருத்தியங்களும் அவசியம் என்பதையும் இறைமகன் கூறியுள்ளார்.

பழைய ஏற்பாட்டில் தாங்கள் உண்மையான இறைவனை வழிபடுவதனால் பிறஜாதியினரின் தெய்வங்கள் அனைத்தும் பேய்கள் என்றும் பூதங்களென்றும் யூதர்கள் கருதினர். குறிப்பாகக் கானானிய, பபிலோனிய, பிலிஸ்திய, எகிப்திய மக்கள் வழிபடும் தெய்வங்கள் எல்லாம் பேய்களென்றும், கேடு விளைவிக்கும் சக்திகளென்றும் கருதினர். அக்காலத்தில் மனிதனுக்கு வரும் கேடுகள், வியாதிகள் அனைத்தும் இத்தகைய தீய சக்திகளாலேயே வருகின்றன என நம்பியதனால், அவற்றின் சகாக்களைக் கொண்டே அவைகளை ஒட்டிய மந்திரவாதிகளும் பூசாரிகளும் இருந்தனர். இதனாற்றான் இறைமகன் யேசுவையும் "பேய்களின் தலைவன் பெயெல்செபூலைக் கொண்டே இவன் பேயோட்டுகிறான்" என அபாண்டமாகக் குற்றம் சாட்டினர் பரிசேயர்கள்.

இன்று விஞ்ஞானங்களின் வளர்ச்சியினால் அறிவுகள், கொள்கைகள் முதலியன வளர்ச்சியடைந்துள்ளன. மழைக்கும், காற்றுக்கும், எரிமலைக்கும் அசாதாரண சக்திகளைக் காரணம் காட்டுவோர், இன்று மிகச்சிலரே அதுபோலவே மனிதனுக்கு வரும் தீமைகளுக்கு எப்போதும் அமானுஷ்ய சக்திகளைக் காரணம் காட்டுவது, அறிவுக்குப் பொருந்தாது. நம் கண்ணுக்குப் புலப்படாத, பரிசோதனைகளுக்குள் கட்டுப்படுத்த முடியாத சக்திகளோ ஆவிகளோ இல்லை என்று நான் கூற முயலவில்லை. உளவியல் அறிவுகளின் ஆய்வுகளின் பயனாக ஆவிகளின் சக்திகளும் உண்டென்பது உண்மையென நிரூபிக்கப்பட்டுள்ளது நன்மையான சக்திகளைப் போலவே தீயசக்திகளும் இருக்க வழியுண்டு அழிவுற முடியாத மனித ஆன்மா-ஆவி என்பன தனித்தன்மை பெறுவது இவ்வுலக வாழ்வில் அவை கொண்டிருந்த மன நிலைகள், இலட்சியங்கள், விழுமியங்கள் என்பதனாற்றான். ஆனால் இத்தகைய மனித ஆவிகள் வாழும் மனிதர்களுக்கு நன்மையோ அன்றேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீமையை விளைவிக்க முடியுமோ என்பது இன்னும் சந்தேகமற விஞ்ஞானத்தினுல் நிரூபிக்கப் படவில்லை. (இறையியல் அதை ஏற்றுக்கொண்டாலும் கூட) அமானுஷ்ய ஆவிகள் உண்டா இல்லையா என்பது உளவியல் வரையறைகளுக்கு அப்பாற்பட்டது, - அது இறையியலுடனும் விசுவாசத்துடனும் சம்பந்தப்பட்டது. பரிசோதனைகளினுல் அது எண்பிக்கப்பட முடியாதது, விசுவாசத்தினுல் மட்டுமே அது ஏற்றுக்கொள்ளப்படக் கூடியது.

வருகின்ற ஒவ்வொரு காய்ச்சலுக்கும், உளச்சுவாதீனமின்மைகளுக்கும், வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கும் இத்தகைய ஆவிகளே காரணமென்று நினைத்துக்கொண்டு, மேலதிகாரிகளுக்கு "போத்தலும், கோழிவறுவலும்" கொடுத்துத் தலையில் ஐஸ் வைத்துக் காரியத்தைச் சாதித்துக் கொள்கிறமாதிரி, இளநீர், எலுமிச்சம் பழம், கோழி, ஆடு முதலியவற்றை வெட்டி பலியளித்துப் பூசாரிக்கே விளங்காத மந்திரங்களைப் பாடிப் பெரும் கூத்தையே அரங்கேற்றுவது முட்டாள் தனத்தையும் விட மடமையானது.

காற்றணைவு என்றும், கண்ணூறு என்றும் பில்லி - சூனியம் என்றும் எத்தனை பேர் - படித்தவர்கள், பாமரர்கள் உட்பட - மடமை நிறைந்த அடிமைத்தளைக்குள் சிக்கிக்கொண்டு இத்தகைய பிரச்சனைகளைச் சரியான முறையில் அணுகித் தீர்வுகாணுது, பூர்வீகத்தனமான, ஆபத்தான முறைகளில் இறங்கிக் காரியத்தையே கோட்டை விட்டுக் குட்டிச்சுவராகியுள்ளனர். இத்தகைய முறைகளினுல் காக்கையிருக்கப் பனம்பழம் விழுந்ததுபோல், குணமானேர் - நலமானேர் சிலர் இருந்தாலும், இவற்றால் பாதிக்கப்பட்டு நிரந்தர நோயாளிகளாய் இருப்போரே அதிகம்.

இறைமகன் யேசு கூறுவதற்கிணங்க ஜெபதப உபவாசம், நற்கிருத்தியங்களுக்கு வல்லமை உண்டு தீமைக்கு அழிக்கும் சக்தி உண்டெனில் நன்மைக்கு ஆக்கும் சக்தி நிச்சயம் உண்டு. இறைச்சக்திக்குக் கட்டுப்படாதது படைப்பில் எதுவுமேயில்லை. நோய்நொடி, பிரச்சனைகள் வேளைகளிலெல்லாம் ஜெபிப்பதைப்போல நன்மையும் நிம்மதியும் தருவது எதுவுமில்லை என்பது உண்மைதான் ஆனுல் அதற்காகக் கண்ட கண்ட வருத்தத்திற்கும், விசர்த்தன்மைகளுக்கும், ஊரைக் கூட்டிப் பேயைக் கூட்டி, ஆடிப் பாடிக் கூத்தாடிச் சடங்குகளைப் பெருக்கிப் பேயோட்டும் நாடகமாடுவது கேவலமானது. பைத்தியக்காரத்தனமானது. சிறுபிள்ளைத் தனத்திலும் சிறுமையானது என்பதே அடியேனின் தாழ்மையான தனிப்பட்ட கருத்து.

(பிழையென்ருல் மன்னிக்கவும்)

இவற்றிற்கு அடுத்தபடியாக நாம் அவ்வளவாகக் கவலைப்படாத / ஆனுல் அதிகமாக ஊறு விளைவிக்கின்ற பேய்களும் பிசாசுகளும் உண்டு. கண்ணுக்குத் தெரியாத அந்த ஆவிப் பேய்கள் ஒருபுறமிருக்க கல்லுளிமங்கன்கள் போல சதா நம் கண்முன்னே உலவிக்கொண்டு உபத்திரவங்கள் புரிந்துகொண்டிருக்கும் உருவமுள்ள பேய்கள் எத்தனை! பணப்பேய்கள், பதவிவெறிப் பேய்கள், லஞ்சப் பேய்கள், காம வெறிப் பேய்கள், பொருமைப் பேய்கள், கொலை வெறிப் பேய்கள், ஆணவப் பேய்கள், ஆவலாதிப் பேய்சள், ஆதிக்க வெறிப் பேய்கள், எளியோரை வருத்தும் பேய்கள், அடுத்தவன் வீழ்ச்சியை ஆவலுடன் எதிர்பார்க்கும் பேய்கள், பொருளாசைப் பேய்கள் - இப்படி ஒரு பிரார்த்தனையே பாடிவிடக்கூடிய, அத்தனை Type ஆனபேய்கள். இத்தகைய பேய்கள் இன்று இறையரசின் வளர்ச்சிக்கு எவ்வளவு இடையூறுகள் செய்கின்றன? இவற்றைப் பற்றிக் கவலைப்படுவோர் இன்று மிகக்குறைவு. இத்தகைய பேய்களை ஓட்டுவோர் ஏறத்தாழ இல்லை என்றே கூறலாம். காலாகாலமாக இத்தகைய பேய்களுடன் நாம் "சேர்ந்து வாழப்" பழகிக் கொண்டோம் என்பது மட்டுமல்ல, அவற்றிற்கு சமூகத்தில் உயர்ந்த இடங்களையும் பிடித்துக் கொள்ள விட்டுக் கொடுக்கவும் பழகிக்கொண்டோமென்பதே பரிதாபகரமான உண்மை.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து பிறப்பு விழா
# சிறப்பு வானொலி நிகழ்ச்சிகள்

நாள்: 24-12-86 நேரம்: இரவு 10.15 மணி

**புதிய உலகம்**

வழிபாட்டு மலர்

நடாத்துவோர் :

அருள்திரு நோயல் இம்மானுவேல்
அருள்திரு தேவதாசன்

நாள்: 25-12-86 நேரம்: காலை 10.00 மணி

**புதிய உலகம்**

சிறப்பு: வீரமாமுனிவர் காட்டும்
கிறிஸ்துவின் பிறப்பு
(இசையிடையிட்ட உரைச்சித்திரம்)

நாள்: 26-12-86 நேரம்: மாலை 7.00 மணி

**புதிய உலகம்**

முதல் வேதசாட்சி விழா சிறப்பு மலர்

சிறப்பு: மெச்சி மில்லியன் கோபி
- ஒரு வேதசாட்சி -
(உரைச்சித்திரம்)

எழுதியவர்: அருள்திரு ஜோசுவா ரெத்தினம்

நாள்: 28-12-86 நேரம்: காலை 10.00 மணி

**புதிய உலகம்**

திருக்குடும்ப விழா சிறப்பு மலர்

சிறப்பு: கவியரங்கம்

பொருள்: நல்லதொரு குடும்பம்

நாள்: 28-12-86 நேரம்: மாலை 7.00 மணி.

**புதிய உலகம்**

நாள்: 30-12-86 நேரம்: இரவு 10.00 மணி

**புதிய உலகம்**

சிறப்பு:

- கிறிஸ்மசுக்குப்பின் சிந்தனை உரை
- 'நத்தார் பரிசு' - நாடகம்

எழுதியவர்: திரு. எம். கனகசிங்கம்

நாள்: 31-12-86 நேரம்: இரவு 10.00 மணி

**புதிய உலகம்**

நன்றி மலர்

சிறப்பு: நன்றி சொல்வோம் - சித்திரம்

எழுதியவர்: திருமதி ரேஸ் ஜோசப்

நாள்: 01-01-87 நேரம்: காலை 8.00 மணி

புத்தாண்டு வழிபாடு நேர்முக அஞ்சல்

இடம்: புனித மரியாள் ஆலயம்
மாம்புரி - நாவற்காடு

நிகழ்ச்சித் தொகுப்பு: **மலர்வேந்தன்**




மட்டுநகரில் தற்போது
தரமான அப்பியாசப் புத்தகங்கள்
உற்பத்தி செய்யப்படுகின்றன.
'எகெட்' அடையாளமிடப்பட்ட
அப்பியாச புத்தகங்கள்
மொணிட்டர் புத்தகங்களை
கேட்டு வாங்குங்கள்.

உற்பத்தி :-

**ராம் இண்டஸ்ரீஸ்**
43, உதய நகர்
சத்துருக்கொண்டான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 11வது அத்தியாயம்

'' மன்னனென்போம் பாரதியை ஆனாலன்று
மடையனென்று சொன்னோரும் வாழ்ந்ததுண்டு ''

— திமிலைத்துமிலன் —

உலகத்தில் வாழுகின்ற ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே எத்தனையோ திட்டங்களைப் போட்டுக்கொள்கிறான். ஆனால் அவன் போடும் திட்டங்கள் நடைபெறாமல் அவன் எண்ணிக்கூடப் பார்த்திராத வேறுபல சம்பவங்கள் அவன் வாழ்க்கையில் இடம் பெற்றுவிடும், அவன் நினைத்தது ஒன்று நடந்ததோ வேறொன்று. நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வங்களே கிடையாது என்று சொல்வார்கள். ஆனால் சிலர் நினைத்தது போலவே நடந்து விடுகின்றனவே. இது எப்படி? இவர்களைப் பொறுத்தளவில் இறைவனே இல்லையா என்று கேட்கத் தோன்றும் அது அப்படியல்ல. இப்படி நடப்பதைப் பார்த்து அது அது அவனவன் பூர்வஜன்மப்பலன் என்று பேசிக் கொள்வார்கள்,

இது உண்மையோ பொய்யோ ஆனந்தனைப் பொறுத்த மட்டில் அவன் எண்ணிய எண்ணங்கள் நிறைவேறிக் கொண்டுதான் வந்தன. 'என்ஜின்போட்' எடுத்து அவன் நடாத்திய மீன் பிடித் தொழிலில் எவரும் எதிர்பார்த்திராத வகையில் அவனுக்கு நிறையவே வருமானம் கிடைத்தது. 'போட்' வாங்கி ஆறு மாதங்கள் முடிவடைவதற்குள்ளாகவே 'போட்' வாங்கப்பட்ட கடன் தனிசுகளையும் கொடுத்து, வீட்டு நிலமையையும் ஓரளவிற்கு நிவர்த்தி செய்து விட்டான். சாதாரண ஓலைக் கிடுகளால் வேயப்பட்டிருந்த வீடும் மண்டபமும் இருந்த இடத்தையே காணமுடியவில்லை. இப்போது ஒரு அழகான எளிமையான இல்லத்தை அங்கே காணமுடிந்தது.

ஆனந்தனின் தம்பி ராமு ஆனந்தனின்கண்டிப்பின் பேரில் 'அட்வான்ஸ் லெவல்' பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவதில் நேரத்தைப்போக்கத் தொடங்கியிருந்தான் சித்திராவின் கழுத்திலும் காதிலும் தங்க நகைகள் மின்னத் தொடங்கின. பாக்கியத்தையும் இப்போது ஊத்தைச் சேலையோடு காண்பது அரிதாகி விட்டது. அவள் காதில் கிடந்த சின்ன சிவப்புக்கல் தோடு பெரிதாக மாறியிருந்தது. சின்னவள் ராணி 'சொப்பர்' சைக்கிளில் புகையிரத நிலயம் வரை போகத் தொடங்கி விட்டாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்கதை

இதையெல்லாம் பார்க்கப் பார்க்க கேள்விப்படக் கேள்விப்பட வீரகத்திக்கும் அவன் மனைவிக்கும் புளிக் கரையத் தொடங்கியது. குறுக்கு வழியில் பணம் சம்பாதித்திருந்தால் அவன் ஆனந்தனை எப்போதோ மாட்டி வைத்துப் புதினம் பார்த்திருப்பான். ஆனால் நேர்வழியில் பாடுபட்டு உழைத்த ஆனந்தனை வீரகத்தியால் எதுவும் செய்து மடக்க முடியவில்லை. ஜெயந்திக்கு ஆனந்தனைக்கண்டு பேசிமகிழ எவ்வளவோ ஆசை ஆனால் ஆனந்தனின் சொல்லுக்கு கட்டுப்பட்டு அவள் மனதில் எழுகின்ற ஆசைகளையெல்லாம் மிகவும் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

ஆனந்தன் இப்போது அந்தக் கிராமத்தில் ஒரு மதிப்புக்குரிய மனிதனாக மாறிக்கொண்டிருந்தான் வெறும் அரசியல் செல்வாக்குகளினால் மக்களிடையே மதிப்பைப் பெறுபவர்களுக்கும் சுயமுயற்சியால் முன்னேறி உண்மையான மதிப்பைப் பெறுகின்ற ஆனந்தனுக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருந்தன. ஆனந்தனும் அவனுடைய இளமைக் கால அட்டாதுட்டித்தனங்களிலிருந்து விலகி புதிய மனிதனாக அடக்கம் பணிவு மற்றவர்களை மதிக்கும் நற்பண்பு போன்றவற்றில் தேறி ஒழுங்கான வாழ்க்கைப்படிகளில் ஏறி முன்னேறிக் கொண்டிருந்தான். ஆனந்தனை நம்பி பல குடும்பங்கள் வாழ்கின்ற ஒரு நிலமை திரும்பிக் கொண்டிருந்தது.

ஆனந்தனின் 'போட்'டில் தொழில் பார்க்கும் சின்னவனின் கைவிரல்களில் மோதிரம் மணிக்கட்டில் அழகான றிஸ்ற்வோச் விதம்விதமான மடிப்புக் குலையாத சேட்டுகள் விலை மதிப்புள்ள சாறன்கள் தெத்துப்பற்களைக்கூட கழற்றி புதிய பற்களைக் கட்டுவித்து அவனும் ஒரு புதிய மனிதனாகவே தோற்றமளித்தான் இப்போதெல்லாம் சின்னவன் கடல் தொழிலுக்குப்போவதை விட மற்றைய நேரங்களிலெல்லாம் ஆனந்தனின் வீட்டிலேயே கிடந்து விடிகிறான். அவனும் அந்த வீட்டில் பாக்கியத்தின் பெறு மகனாகவே மாறி விட்டான்.

அந்த நாட்களில் செல்லையா வத்தை ஓட்டும்போது இருந்த மகிழ்ச்சியும் மனநிறைவும் இப்போது மீண்டும் திரும்பி வந்ததை எண்ணி யெண்ணி பாக்கியம் பெருமைப்பட்டாள். என்றாலும் வத்தைத் தொழில் தடைப்பட்டு இடைக்காலத்தில் பிள்ளைகளை வளர்க்க முடியாத நிலையில் அவள் கஷ்டப்பட்டதை அவளால் மறக்க முடியவில்லை. எடுத்ததற்கெல்லாம் எவரிடம் பேசும்போது ''அந்த நாட்களில் நான்பட்ட கஷ்டம் எவர் பட்டிருக்கிறாங்க!'' என்று இடையில் சேர்க்காமல் அவள் பேசியதே கிடையாது.

வீட்டிற்கு முன்பாக ஆற்றங்கரையில் ஆனந்தன் மீன் வாடியைக் கட்டியிருந்தான். இரவு பத்துப்பதினொரு மணிக்கும் வாடியில் தொழிலாளர்களின் சத்தம் தொடர்பாகக் கேட்டுக் கொண்டேயிருக்கும். வாடியில் காவலுக்கென்றும், கடலுக்குக் கொண்டு செல்ல உயிராக இறால் பிடிப்பவர்களிடமிருந்து இறாலை வாங்கி கூட்டில் கட்டுவதற்கென்றும், மீனுக்கு ஐஸ் போட்டு பெட்டிகளில் அடைத்து லொறிகளில் ஏற்றுவதற் கென்றும் பையன்கள், பெரியவர்களென்று பலர் அங்கே தொழில் பார்த்தார்கள். ஆனந்தனுக்கு இரவுபகல் மூச்சு விடக்கூட முடியாத வேலை. கணக்கு வழக்குகளையெல்லாம் அவனே கவனித்தான். சிலவேளை ஓய்வாக இருக்கும் போது ராமு வந்து அவனுக்கு உதவி செய்வான். அப்போதுதான் ஆனந்தன் கொஞ்சநேரம் தூங்கி'றெஸ்ற்' எடுத்துக் கொள்வான்.

ஆனந்தன் 'என்ஜின் போட்' வாங்கிய அடுத்தடுத்த மாதங்லளிலேயே இன்னும் பலர் 'போட்' எடுத்திருந்தார்கள். வெறிச்சோடிக் கிடந்த அந்த ஆற்றுக்குள் இப்போதெல்லாம் குறுக்கும்நெடுக்கும் ஒரே இயந்திர 'போட்' மயம் தான். ஆனந்தனின் தூண்டுதலின்பேரில் அவன் வயதையொத்த இன்னும்சில இளைஞர்களும் போட் எடுத்திருந்தார்கள். இதில் ஆச்சரியம் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெனில் எல்லா போட்காரர்களும் தாங்கள் பிடிக்கும் மீன்களை உரிமையோடு ஆனந்தனுக்கே கொடுத்ததுதான்.

ஏற்றத் தாழ்வுகள் இல்லாமல், நான் நீ என்ற சுட்டு விரல் அசைவுகள் ஏற்படாமல் முதலாளி தொழிலாளி என்று வெளிப்படையாகக் கூடச் சொல்லிப் பழகாமல் வழமை போலவே அண்ணன், தம்பி உறவுகளைச் சொல்லியே அந்தச் சின்னஞ்சிறிய கிராமம் மளமளவென எவருக்கும் சொல்லிக் கொள்ளாமலேயே முன்னேறிக் கொண்டிருந்தது.

அன்று ஒரு ஞாயிற்றுக் கிழமை. வலைகளை கரைக்கு ஏற்றிக் காயவைத்து, கிழிசல்களைப் பொத்தி யெடுத்து ஒழுங்கு செய்வதற்காக எல்லா போட்காரர்களும் அன்றைய நாளை ஓய்வாக எடுத்துக் கொண்டார்கள்.

ஆனந்தனும்,சின்னவனும் மற்றும் அந்த போட்டில் போகின்ற தொழிலாளர்களும் முற்றத்தில் வலையை விரித்துப் போட்டு 'பீத்தல்களை' பொத்திக் கொண்டிருந்த போது தூரத்தில் கூத்துப் பாட்டுச் சத்தமொன்று கேட்டது 'ச்சா கன நாளைக்குப் பிறகு ஒரு கூத்துப் பாட்டொன்றை காது குளிரக் கேட்க முடிகிறது. டே சின்னவா, ஆரெண்டு பார்டோ படிச்சிவாறத!' என்று ஆனந்தன் சின்னவனிடம் சொன்னதும் சின்னவன் ஓடிப் போய்ப் பார்த்துவிட்டு வந்து சொன்னான், ''ஆனந்தண்ணே என்ட மாமன்தான் வாறான், ஆளுக்கு நல்ல வெறிபோல கிடக்கு!'' இதைக் கேட்டுக் கொண்டிருந்த மாணிக்கம் வாய்க்குள் அடக்கி வைத்திருந்த வெற்றிலைச் சாற்றை 'புளிச்' சென்று துப்பிவிட்டுச் சொன்னான், ''தம்பி அந்தாள் ஆடின கூத்துகளுக்கு கணக்கு வழக்கில்லே. இந்த நாளையில ரஜனிய, சில்க வெச்சிக் கொண்டு படத்த ஓட்டுற மாதிரி அந்த நாளையில இவன்ட மாமன் கதிராமன வெச்சிக் கொண்டே கூத்த நடத்தியிருக்கிறாங்க. சும்மா சொல்லப்போடா அந்தாள்ற கண்டம் நல்ல கண்டம். இப்பயும் அவரக் கதிராமரெண்டா ஒருவருக்கும் தெரியாது. அருச்சுனன் கதிராமனெண்டாத் தான் தெரியும் விடியவிடியப் பாடினாலும் கேட்டுக்கொண்டிருக்கலாம்!'' இப்படி மாணிக்கம் சொல்லி முடிக்கவும் கதிராமர் அங்கே வரவும் நேரம் சரியாகவே இருந்தது.

சாறனை மடித்துக் கட்டியிருந்த கதிராமர் ஆனந்தனைக் கண்டதும் சட்டென அதை அவிழ்த்து விட்டுக் கொண்டு வாயெல்லாம் வெற்றிலைக் காவிபடிந்த பற்களாகத்தெரிய அங்கே வந்தார். சின்னவன் வெட்கத்தில் ஆனந்தனுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு, ''அண்ணே இவர் ஏதோ என்ர விசயமாகத்தான்வந்திருக்கார் சோக்கா கதைச்சிப் போட வேணும்!'' என்று குசுகுசுத்தான். '' வாங்க பெரியவர் வாங்க '' என்றான் ஆனந்தன். '' நானம்பி...வந்த...இவர் நம் மட மருமகனைப் பத்திப் பேசத் தான்...'' ''ஆரு சின்னவனையா சொல்லுறீங்க...'' ''வேறாரம்பி எனக்கு உள்ளதே ஒரேயொரு மகளும் இந்த மருமகனும் தானே...'' ''அடடே! இஞ்ச சித்திரா, அந்தப்பாய எடுத்து வந்து போடு...'' ''எனக்கென்னத்துக்கம்பி பாயும்,தலகாணியும் நான் இவ்வடத்தையே இருக்கிறன்...'' பாய் விரிபடுவதற்கு முன்னரே கதிராமர் முற்றத்தில் ஆனந்தனுக்கு முன்பாக அமர்ந்து கொண்டார். அந்தளவில் சின்னவன் மெல்ல எழுந்துசென்று பாக்கியத்தை மெதுவாகக் கூப்பிட்டுச் சொன்னான் '' அம்மா, நீங்க தான் போய் என்ர மாமனோட பேசி, ஒரு முடிவெடுங்க. இந்தச் சந்தர்ப்பத்த விடப்போடாது..'' பாக்கியம் சிரிப்பை கொடுப்பிற்குள் அடக்கிக் கொண்டு, கையில் வெற்றிலை வட்டாவையும் தூக்கிப்பிடித்தபடி அங்கே நடந்தாள்.

(தொடரும்)

---

(22ம் பக்கத் தொடர்ச்சி)

விடிந்தால் ஊரெல்லாம் நத்தார் கலகலப்பு ஏகமாக இருக்கும். இந்தப் பிஞ்சுகளின் மனமும் களிப்பில் மிதந்து கொண்டிருக்கும். இந்த வீடே கலகலத்துக்கொண்டு இருக்கும். ஓ! இந்தப் பண்டிகைக் காலம் எவ்வளவு பரிசுகளை எங்களுக்கு தந்துவிட்டது.

- றெபினுக்கு ஒரு தங்கையை பரிசளித்தது.
- அம்மாவுக்கு இரண்டு சின்னஞ் சிறுசுகளை கொடுத்துவிட்டது.
- எனக்கு புது உறவுகளை கொடுத்துவிட்டது.

நான் இன்னமும் வாழ வேண்டும்; இப்பிள்ளைகளுக்காக வாழவேண்டும்; இவர்களுக்காக நான் குடியைவிட வேண்டும் இறைவா உனக்கு என் நன்றிகள். இனி நான் அனாதையாகி விடமாட்டேன்.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கடல்கடந்த நாடுகளில்

# தமிழ்மொழி

✶ ஈழத்துப்பூராடனார் க. தா. செல்வராஜகோபால்
✶ திருமதி பி. ப. செல்வராஜகோபால்
கனடா.

(முன்னிதழ் தொடர்ச்சி)

இந்தப் பிரசுரங்களை தமிழர்களுக்குக் கொடுத்து பிள்ளைகளுக்கு ஒவ்வொரு நாளும் குறைந்தது 10 நிமிடங்களாவது சொல்லிக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்வோம்.

இலங்கையின இனப்பிரச்சினை உலகத்தில் உள்ள எல்லாத் தமிழினத்தவர்களுக்கும் ஒரு அபூர்வதாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வந்த இடத்தின் வளத்தில் வாழ்ந்து சொந்த இடங்களை மறந்து வாழ்ந்தவர்களுக்கு ஒரு இன எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பது தமிழர் வரலாற்றில் ஒரு முக்கிய சம்பவமாகக் கருதப்படும். உல்லாசபுரி வாழ்க்கையாக தமது வாழ்க்கையை அமைத்து நாவில் ஆங்கிலம் நடமாட ஏவச் சிங்களமொழி இடம்பெற வாழ்ந்த மேலான தமிழர்களுக்கு முதலடியிலே ஞானம் வந்து தமிழ் - தமிழன் என்ற உந்துதல் ஏற்பட்டதுபோலத் தங்களைத் தமிழர் என்று சொல்ல அஞ்சவே பயப்பட்ட உலகத் தமிழர்களிடையே இப்பிரச்சினை ஒரு புதிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தனிநாயகம் அடிகளின் உலகத் தமிழாய்வு நிறுவனம் மேல் மட்டத்தில் எப்படியொரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதோ அதுபோல இப்பிரச்சினை அடிமட்டத்திலிருந்து புறப்பட்டு மேல் மட்டத்தில் மாத்திரமல்ல ஏனோதானோ என்றிருந்த மேன்மக்கள் மட்டத்திலும் ''தமிழன்'' என்ற ஒரு உணர்ச்சியை மட்டுமல்ல, தாம் இதுவரை பாராமுகமாக இருந்த பாதகத்திற்குப் பரிகாரம் காண வேண்டிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

அதுமட்டுமல்ல 48000 பேருள்ள ஒரு சிறு நாட்டிற்கு ஐக்கிய தேச ஸ்தாபனத்தில் அங்கத்துவம் இருக்கிறது. ஆறு கோடிக்கு மேற்பட்ட தமிழினத்துக்கு ஒரு அங்கத்துவம் இல்லையே என்று அரசியலவதானிகளை அதட்டுமளவிற்கு அத்திவாரமிடப்பட்டுள்ளது'

அந்தமானில் 1979ம் ஆண்டு பிஜீ தீவில் நடந்ததுபோல தமிழ்ப்பாடசாலைகளை மூடி அங்கு இந்திமொழி திணிக்கப்பட்ட போது தனக்கே எரியூட்டி எதிர்ப்புத் தெரிவிக்க இருந்த ஒரு தமிழ் மகனை நாங்கள் சந்தித்தோம். அன்பரான திரு. கந்தசாமி என்பவர் ஒரு வணிகப்பட்டதாரி, பெரும்வணிகர். அந்தமானில் சொந்தமாக வியாபார நிலையம் வைத்திருப்பவர். இவருடைய முயற்சியால் அங்கு தமிழ் தப்பிற்று. இதேபோன்ற ஒரு தமிழ்ச்சாமி பிஜியில் இருந்திருந்தால் அங்கு தமிழ் தழைத்தே இருக்கும்.

தன்காலமறியாத பாம்புக்கும் நம்தழிழ் மக்களுக்கும் அதிகம் வேறுபாடு தெரிவதில்லை சிங்கப்பூரில் எவ்வாறு தமிழ் இடம்பெற்றுள்ளது என்பதை அங்கு கண்டகாட்சிகளால் வியந்து போனோம். வங்கித்தொழிலில் ''Instant teller'' என்று உடன்பணம் வழங்கும் முறையுண்டு. வங்கியால் நமக்கு ஒரு விபரத்தகடும், இரகசிய சமிக்கை இலக்கமும் வழங்கப்படும். நாங்கள் அந்த வங்கியின் கிளைகள் உள்ள எங்குபோனாலும் அதற்கென குறிக்கப்பட்ட வங்கிக்குப் புறச் சுவரிலுள்ள இடத்தில் உள்ள இயந்திரத்தில் நமது தகட்டை நுழைக்க வேண்டும். பின்பு நாம் செய்யவேண்டியவற்றை ஒரு திரையில் காட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுவதோடு, நமக்கு என்ன தேவையென்பதை யும் கேட்கும். நாங்கள் உரிய கட்டளைப் பொத்தானை அழுத்தினுல் நாம் இரகசிய சமிக்கை எண் சரியாக இருக்குமாஞல் உட னே பணமும், தகடும், கணக்கு மீதியும் வெளிவரும். ஒரு நிமிடத்தில் இப் பரிவத் தினை முடிந்து விடும். சிங்கப்பூரில் இவ் வசதியுண்டு. இங்கே திரையில் ஆங்கிலம், தமிழ், மலாய மொழியில் பணிவிடைக் கட் டளைகள், வழிகாட்டுகள் உள்ளன. அவ்வ ளவு அளவாக சிங்கப்பூரில் தமிழ்மொழி உபயோகம் உண்டு.

ஆனுல் பணநோட்டு, முத்திரையில் தமிழ் மொழி தாங்கி வருவது நமது இலங்கையிற் ருன். இந்திய பணநோட்டில் தற்போது தமிழ் இடம்பெறுகின்றது. ஆனுல் இலங்கை இவ் விசயத்தில் சற்றுத் தாராளமாக முத லிடத்தைப் பெற்றுக் கொண்டது என்பது மதிப்புக்குரிய விசயமே.

கனடாவில் 33க்கு மேற்பட்ட முதுச மொழிகளுக்குரிய வளர்ச்சி ஆதரவு அரசால் வழங்கப்படுகிறது. உலகத்திலேயே மிகப் பெரிய கோபுரம் கனடா ஒன்ருேறியா மாகா ணத்திலுள்ள தொரன்ரோ பட்டினத்தில் உண்டு. இது நியூயோக்கில் உள்ள எம்ப யக் கட்டிடத்திலும் ரஷ்ய மொஸ்கோவில் உள்ள கோபுரத்திலும் பார்க்க அதியுயர்ந்தது இதன் நுழைவாயிலில் ''வணக்கம் வாருங் கள்'' என்று நல்வரவு தமிழில் பெரிய எழுத்தில் எழுதியிருக்கும் தாராள மனப் பான்மை தமிழ் மொழிக்கும் வழங்கப்பட் டுள்ளது.

ஆனுல் இதனை ஏனைய இனத்தவர்கள் உப யோகப்படுத்துவதுபோல நம் தமிழினம் உப யோகிப்பதில்லை. நாங்கள் இங்கு தமிழ் வகுப் புகளை ஆரம்பித்தபோது தமிழ்ப் பிள்ளைகளுக் குத் தமிழ் கற்பிப்பதற்காக எண்ணினேம் ஆனுல் நடைமுறையில் தமிழே புரியாத, தெரி யாத, ஒரு வேறு இனத்துக்குக் கற்பிப்பதிலும் பார்க்க மிகவும் வேதனையும் சிரமமும் பட் டோம். இதுபற்றி பின்பொருபோது விளக்கு வோம்.

வான்கூவரில் ஒரு தீபாவளி விழா நடந் தது, இது பிஜிதீவில் இருந்து குடியேறியுள்ள மக்களால் ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்ச்சி. அங்

## வாயாடி வண்டுமணி

நாம் அஹிம்சையையே விரும்புகிருேம்! வன்முறை யால் ஒவ்வொரு உயிரும் அழியும்போது என் இத யம் வருந்துகிறது.

— சார்க் மகாநாட்டில் ஜனுதிபதி

'கேக்கிறதுக்கு' ரொம்ப நல்லாயிருக்குதுங்க... ஆமாங்க... கேக்கிறதுக்குத்தான். கொஞ்சக் காலத் துக்கு முன்னுடி நம்ம ஜனுதிபதி ''குத்துச் சண் டையிலே மூக்கில குத்துறமாதிரிக் காட்டி வயித் தில குத்துறதுதான் என் பாணி. அரசில்லயும் அப்படித்தான். இதனுல என்னராஜதந்திரி அப்ப டீன்னு பேசிக்கிருங்க. ஆனு ஒரு அரசியல்வாதி அப்படித்தான் செயல்படனும்'' அப்படீன்னு பேசின ஞாபகமுங்க எனக்கு இருக்கிற குழப்பம் இதுதாங்க. இந்த 'அஹிம்சை' மூக்கா, வயிரு? புரியல்லீங்க !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள்ளவர்கள் தம்முள் இந்தியில் பேசுவார்கள். ஆங்கிலம் பொது மொழி. அப்படிப்பட்டவர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட நிகழ்ச்சி நமக்கு என்ன சுகத்தை தரப்போகின்றது என்றுதான் எங்கள் நண்பர் ஒருவரின் வேண்டுகோளுக்காக வெறுப்புடன் போனேம். நான்கு மணித்தியாலம் நடந்த நிகழ்ச்சியைக் கண்டு கேட்டு நிறைவுடன் திரும்பினேம். காரணம் அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவும் தமிழகப் பாணியில் அமைந்திருந்ததேயாகும். மேடையில்கூட தீபாவளிப் பண்டிகை விழா தமிழ்ச் சங்கம் என்று எழுதப்பட்டிருந்த திரை கட்டப்பட்டிருந்தது. அநேக நிகழ்ச்சிகள் இந்தியில் நடந்தன. அறிவிப்புகள் ஆங்கிலத்திலும், இந்தியிலும் நடந்தது. எங்கு பார்த்தாலும் இந்தி மொழியில்தான் உரையாடல். ஆனால் மேடையில் தமிழ்ப்பாட்டுகள் இடைக்கிடை ஒலித்துக்கொண்டிருந்தது. ஒரு இளைஞன் பெயர் சாமிநாதன். ''கந்தா காருண்யனே கன சேவலனே'' பாவட்டஞ்சோலைக்குள்ளே ஒரு குயில் வாய்விட்டுக் கூவுதையா என்ற பழைய பாடல்களைப் பாடினன். இப்பாடல்கள் 20ம், 30ம் ஆண்டுத் தொகுதிகளில் தமிழ் மக்களிடை மிகவும் பிரசித்திபெற்ற முருகன் பக்திப் பாடல்கள். இப்போது இவை தமிழகத்திலும் இலங்கையில் மறைந்துவிட்ட போதிலும் கனடாவில் முழங்கியதைக் கேட்டு புல்லரித்துப் போனேம். பாடியவரைக் கண்டு வாழ்த்த வேண்டும் என்று காத்திருந்து சந்தித்தோம். அவர் தனது தகப்பனுருடன் எங்களைச் சந்தித்தார். தமிழில் பாராட்டினேம். பையனுக்கு விளங்கவில்லை. வட் யூ சே என்று ஆங்கிலத்தில் கேட்டான். கந்தா காருண்யனே பாட்டு நன்ருக இருந்தது என்று பாராட்டியது எந்து பறைஞ்ஞு என்றுகூட இடைத்தமிழில் கேட் கேட்காமல் ஆங்கிலத்தில் கேட்டது எங்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

தந்தையார் இடையிற் புகுந்து நாங்கள் சொன்னதை அவனுக்கு இந்தியில் சொன்ஞர். பையனுக்குத் தமிழ் வராது பாட்டுக்களை அவனுடைய பாட்டன் சொல்லிக்கொடுத்துப் பாட்டஞராகிவிட்டார் பையன் தமிழ்ப்பாட்டுக் காரஞகி விட்டான். ஆனல் தமிழில் ஒரு சொற்கூட அவனுக்குத் தெரியாது அதுபோல தீபாவளிப் பண்டிகையை ஒழுங்குசெய்த நிகழ்ச்சியாளர் நல்லதம்பி என்பவர் பரம்பரையாகத் தொங்கவிடும் தமிழ் எழுத்துத் திரையைத் தொங்க விட்டிருந்தார் ஆனல் அதை வாசிக்கத் தெரியாது. தமிழில் தடுமாறி இந்தி, ஆங்கிலம், தமிழ் எனும் திரிகடுக மொழி பேசுவார்.

இவையெல்லாம் தமிழ் எப்படிப் பாப்பார் கேட்பாரின்றிச் சீரழிந்தது என்பதுக்கு சில அத்தாட்சிகள் இவர்கள் மூலமாகத் திரட்டிய சம்பவங்களின் மூலமாக தமிழர் எப்படித் தமிழை மறந்தனர் என்பதை இனிவரும் கட்டுரைகளில் பார்ப்போம்.


தரமான 22 கரட் தங்க நகைகளை
குறித்த தவணையில் மாற்று தவணையின்றி கைதேர்ந்த வேலைப்பாடுகளுடன்
நவநாகரீக டிசைன்களில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

**சியாமளா நகை மாளிகை**

**20, மெயின் வீதி, மட்டக்களப்பு.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுநகரில்

உங்கள் றப்பர் சீல்களை (றப்பர் ஸ்ராம்ப்)
நான்கு மணித்தியாலத்தில் தரமான முறையில்
குறைந்த விலையில் உடனுக்குடன் செய்து தரப்படும்.
பிறிண்டிங் வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

நீங்கள் நாடவேண்டிய இடம்.

## ரெட்ணம் றப்பர் ஸ்ராம்ப் மேக்கர்

ராஜா பில்டிங் 3வது மாடி
முனைத்தெரு
மட்டக்களப்பு.

உங்களுக்கு தேவையான
எல்லா விதமான **P.V.C.** பைப் உதிரிபாகங்கள்
விற்பனை செய்யப்படுகிறது.
விற்பனையாளர்களுக்கு 50 வீதம் கழிவு கொடுக்கப்படும்.




தயாரிப்பாளர்கள்:—

## ஏஞ்ஜல் எண்டர்பிறைஸ்

**46, உதய நகர், சத்துருக்கொண்டான்.**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 36

(கிறிஸ்து பிறப்பு நிகழ்ச்சிகள்)




பரிசு :

ரூபா 50/-, 25/-

முடிவுத் திகதி:

**31-12-86**

முழுப்பெயர்: ..........................................................................

முகவரி : ..........................................................................

..........................................................................

## இடமிருந்து வலம்

1. சூசை பிள்ளையையும் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்துக்குச் சென்ற நேரம்.
2. சக்கரியாஸ் தம்பதியினர் வாழ்ந்த பிரதேசம் முடிவின்றி நிற்கின்றது.
4. சத்திரத்தில் சூசைக்குக் கிடைத்த பதில்.
5. இறைவன் இதிலிருந்தும் நீர் புறப்படச் செய்ய வல்லவர்.
6 இதன் பொருள் 'கடவுள் நம்மோடு'.
8. தூதர் பாடியது குழம்பினுல் புதிராகத் தான் இருக்கும்.
9. அருளப்பர் இது குடிக்கமாட்டார் என அறிவிக்கப்பட்டது.
10. கிரேனியு ஆண்ட நாட்டிற்கும் எல்லையில்லை.
11. இவர் வருவார் என யூதர் காத்திருந்தனர்.
12. கடவுளின் தூதர் கன்னிகையிடம் அனுப்பப்பட்ட மாதம்.
13. மரியாள் பெற்றெடுத்தது.

## மேலிருந்து கீழ்

1. இயேசு ஆலயத்தை இதற்கு ஒப்பிடுகின்ருர்.
2. திருச்சட்டம் அடங்கிய நூல்.
3. சூசை வாழ்ந்த ஊர்
5. அன்னுவின் தந்தை.
6. இயேசுவின் பிறப்பு முதன்முதல் இவர்களுக்குத்தான் அறிவிக்கப்பட்டது.
7. தலைப்பேருன ஆண்குழந்தைக்காக ஒப்புக் கொடுக்கப்படவேண்டியதில் ஒன்று.
9. சூசைக்கு மண ஒப்பந்தமானவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 34.

## முடிவுகள்

### இடமிருந்து வலம்

1. குருத்துவப் பணி
5. வரி
8 வேர்
9. ல்எலை (எல்லை)
11. சாவு
12. கூலி
13. பெபேயாள்
14. தாய்
15. அப்போஸ்தலன்

### மேலிருந்து கீழ்

1. குயவன்
2. துயர (ம்)
3. வசை
4. பரிவு
6. களவு
7. கல்
8. வேலை
10. எலியாஸ்
11. சாத்தான்

**போட்டியாளர் கவனத்துக்கு!**

தொண்டனில் பிரசுரமாகும் விவிலியக்குறுக்கெழுத்துப்போட்டிக் கூப்பனில் நிரப்பி அனுப்பப்பட்டால் மட்டுமே போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும். வேறு வகையில் வரைந்து அனுப்பப்படும் படிவங்கள் போட்டியில் சேர்க்கப்பட மாட்டாது என்பதை போட்டியாளருக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

— நிர்வாகம் —

### பரிசு பெறுவோர் :

1ம் பரிசு :

இராயப்பு மிக்கேல்,
தாழங்குடா - 2,
காத்தான்குடி அ / நி.

2ம் பரிசு :

கொட்பிறி நிமலன் ஞானேந்திரன்,
10, நொத்தாரிஸ் ஒழுங்கை,
மட்டக்களப்பு.

### பாராட்டுப்பெறுவோர் :

செல்வினி அன்ரனி,
57, லேக் வீதி - 1,
சிங்களவாடி, மட்டக்களப்பு.

றெஜினு ஜோசப்,
கார்மல் அருனோதயம்,
அக்கரைப்பற்று.

நேசதுரை கலைச்செல்வி,
2ம் ஒழுங்கை,
கல்லடி கொலனி, மட்டக்களப்பு.

செல்வி R. சில்வியா
ஆலய வீதி,
பாலையூற்று, திருகோணமலை.

விஞேதினி நடராசா,
157, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

போட்டியில் பங்குபற்றியோர் 95 பேர்
சரியான விடையளித்தோர் 67 பேர்

★ அனைவருக்கும் எமது நன்றி ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இன்ப அதிர்ச்சி

தொண்டனைப் புரட்டினுல் பெரும் அதிர்ச்சியாக இருக்கிறது. ஏனெனில் வயது போகப் போக முதுமை அடைவதுதான் வழக்கம். ஆனுல் தொண்டன் இளமை மாருது அறிவையும், ஆற்றலையும் விரிவு படுத்துகிறது.

மா. ஜோர்ஜ்
தாழங்குடா.

## அர்த்தமுள்ள அட்டைப்படம்

ஐப்பசி இதழ் கண்டேன்! அட்டைப் படமும் அதற்கான விளக்கமும் இன்றைய உலகத்தின் நிலையைப் படம் பிடித்துக் காட்டுவதாக இருந்தது.

ஜோயினி அருள்விழி
மண்டூர்

## பாராட்டு

ஐப்பசித் தொண்டனில் 'நற்செய்திப் பணியில் ஒரு பார்வை' தந்த அருள்திரு யோசுவா ரெட்ணம் அவர்களுக்கும், 'யேசுக்கிறிஸ்து இன்று நமக்கு யார்? என்ற கட்டுரை தந்த அருள் செல்வி றூவினு அவர்களுக்கும் எமது பாராட்டுக்கள்!

அ. ஸ்ரெலா பாரதி
அம்பாறை.

## தேனுயினிக்கும்

தொண்டனே! உன்னுடைய இதழ்களில் சில இடங்களில் சதிரத்திற்குள் அருமையான, படிப்பினையைத்தரவல்ல வசனங்களைத் தேனுகப் பொழிகின்றுயே! முதலில் அதையே பிரித்துப்பார்க்கும் எனக்கு அவை ஒரு படிப்பினை.

எமலின் வர்கீஸ்
ஏருவூர்

## விழிக்கச் செய்தது!

ஐப்பசித் தொண்டனில்

'இவர்தான் இயேசுக் கிறீஸ்து' நற்செய்திப்பணி ஒரு பார்வை' எம் அகப்பார்வையை விழிக்கச் செய்தது. (அன்று) அகதிகள் உன்னைக் கணக்கெடுக்காவிட்டாலும், இன்று அகதிகளைக் கண்ணேட்டம் விட்டு கணக்கெடுத்து விட்டாயே உன் பணி தொடர வாழ்த்துகிறேன்.

T. பத்மா
பாண்டிருப்பு.

## வெல்லுதல் இயலா!

காலமறிந்து கட்டுரைகளை வெளியிடுவதில் தொண்டனை வெல்ல வேறெந்த பத்திரிகையாலும் முடியாது. வேற்றுமை பாராது ஆற்றும்பணி மகத்தானது! பாராட்டுக்கள்!

சுமதி மரியதாஸ்
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார் லூக். 2/1.



# இதயத்திலிருந்து.....

இத்திங்கள் 20ஆம் நாள் ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் குருத்துவ வெள்ளி விழாவாகும்.

இருபத்தியைந்து ஆண்டுகள் குருவாகவும், கடந்த நான்கு ஆண்டுகள் ஆயராகவும் இவர் ஆற்றிவருகின்ற பணி அளப்பரியது.

ஆயரவர்களுக்கு வெள்ளிவிழா வாழ்த்துக்களை அள்ளிச் சொரிவதிலே தொண்டன் பூரிப்படைகின்றான்.

சமூகத்தொடர்புச் சாதனங்களுக்கு இவர் தந்துள்ள ஊக்கமும்' ஒத்துழைப்பும், உதவியும் குறிப்பிடத்தக்கன. வேறு குருக்களிடமும், ஆயர்களிடமும் காண்பதற்கு அரியன.

எமது மறைமாவட்டத்தைப் பொறுத்த அளவில் சமூகத் தொடர்புகள் நிலையத்தின் - அதுசார்ந்த கலையகத்தின் தோற்றமும், தொண்டனின் வளர்ச்சியும் இதற்கு உரைகல்லாகும்.

தமது குருத்துவ வாழ்வின் 25 ஆண்டுகளில் ஆயர் புரிந்த பணிகளை இங்கே பட்டியல் போட்டு விடுவது எளிதன்று. ஆயினும் அவரது கடின உழைப்பும், ஆற்றலும், அறிவும், பரந்த நோக்கும் என்றும் நினைவுகூரத்தக்கதும், பாராட்டுக்குரியதுமாகும்.

அர்ப்பண வாழ்வில் 25 ஆண்டுகள் காண்பது எளிதன்று அதைச் சிறப்பான வகையில் வாழ்தல் மிக அரிது. அதை நிறைவாக வாழ்ந்த ஆயரவர்களுக்கு வாழ்த்துக் கூறுவோம்.

வெள்ளிவிழா பொன்விழாவாக நிறைய இறை அருளை வேண்டுவோம்.

★ ★ ★

மற்றொரு 'கிறிஸ்மஸ்' வந்துவிட்டது. விடியல் நிச்சயம், மீட்பு உறுதி என்பதன் நம்பிக்கை ஒளி தெரிகிறது.

துன்பங்கள் மறையும் !
துயரங்கள் விலகும் !
அச்சங்கள் அகலும் !
அழுகைகள் மாறும் !

ஆமாம் ! அமைதி இந்த அகிலத்தை ஒருநாள் ஆளும் என்று விரக்தியின் விளிம்பிலும் நம்பிக்கை தருகிறது கிறிஸ்துவின் பிறப்பு.

அந்த நம்பிக்கையும் உறுதியுமே இன்று எமக்கு — எமது சமூகத்துக்குத் தேவை.

இந்த நம்பிக்கையை கிறிஸ்து பிறப்பு விழா நமக்கு வழங்கட்டும்.

புதுவாழ்வின் பூபாளம் இனிதாய் இசைக்கட்டும்.

சி. பி. ராஜேந்திரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS

FROM

THE FINANCE CO. LTD.

19, CENTRAL ROAD,

BATTICALOA.

Dial: 065 - 2829

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

## தொண்டன் வளர

# வாழ்த்துகிறோம்

வைத்திய கலாநிதி ஜே. ஏ. ஞானப்பிரகாசம்

திருமதி. வசந்தா ஞானப்பிரகாசம்

மரிஜோ நிவாட் ஞானப்பிரகாசம்

மரியோ எல்ஜின் ஞானப்பிரகாசம்

இச்சஞ்சிகை மட்டக்களப்பு, புனித செபஸ்தியான் அச்சகத்தில் அச்சிட்டு தொண்டன் ஆசிரியர் குழுவினரால், 12-12-86ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org